Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 16 (15.09.2003) திங்கட்கிழமை இதழ்: 346

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
தூரித தடல்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-dej-srnskr @ evreka.lk
(கி.1156)

ஹெல்கிசன் குழுவினர் புதனன்று வருகின்றனர்!

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நாளை மறுதினம் கொழும்பு வரவுள்ளனர்.

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கிலேயே - இவர்களது இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் -

திருகோணமலை - வான் - எல என்ற இடத்தில் புலிகள் புதிதாக முகாம் அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் செய்திகள் குறித்து அராய்வதற்காக, இவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவினரையும் சந்திப்பர்.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகள் சம்பந்தமாக இலங்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

அகாஷியை தமிழ்ச்செல்வன் வரவேற்கிறார்

கிளிநொச்சி வந்த ஜப்பானியத் தூதுக் குழுவினர்.

தலைவரின் பரிசீலனையிலுள்ள திட்டவரைவு இம்மாத இறுதிக்குள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும்!

அகாஷியைச் சந்தித்த பின் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எம்மால் தயாரிக்கப்பட்ட திட்டவரைபு, தலைவர் பிரபாகரனின் பரிசீலனையில் உள்ளது. இதில் ஏதாவது மாற்றங்கள் தேவைப்படின் - சட்ட ஆலோசனைகள் பெற்று - இம்மாத இறுதிக்குள் நோர்வே ஊடாக அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று வன்னிக்கு விஜயம்செய்த ஜப்பானியத் தூதுவர் யசுஷி அகாஷி கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடல் முற்பகல் 11 மணிமுதல் 12.30 மணிவரை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் பற்றி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஊடக வியலாளர்களுக்குத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பானியத் தூதுவர் அகாஷியின் சந்திப்பின்போது, இன்றைய

(10 ஆம் பக்கம் பார்க்க)

சங்கத்தானை இராணுவ காவலரண் இனந்தெரியாதவர்களால் தீக்கிரை!

(தென்மராட்சி)

சாவகச்சேரி - சங்கத்தானை புகையிரத நிலையப் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண் ஒன்று இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ரயில் பெட்டியைப் பயன்படுத்தியே இந்தக் காவலரண் அமைக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தனியார் கல்வி நிலையம் ஆகிய வற்றுக்கு அண்மையில் இந்தக் காவலரண் அமைந்து காணப்படுவதுடன் - கற்றல், போக்குவரத்துச் செயற்பாடுகளுக்கு, கடமையில் இருக்கும் படையினர் குந்தகம் விளைவித்து வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒரு இலட்சம் கையெழுத்துக்களுடன்

வலிகாமம் வடக்கு மக்கள் கோபி அனானுக்கு மகஜர்!

(தெல்லிப்பளை)

வலி.வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக - ஒரு இலட்சம் மக்களின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஒன்றை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை ப.நோ. கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று வலி. வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.சிவமகராஜா தலைமையில் நடந்த கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஒன்றியப் பிரதிநிதிகள் - வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தக்கோரி நாம் பல போராட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

கதிர்காமர் கூறிய கருத்துக்களால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன!

விசனம் தெரிவிக்கிறார் கடற்படைத்தளபதி தயா சந்தகிரி

(கொழும்பு)

கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்துக்கள்- பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதாக கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றைத் தயாரித்து அனுப்பும்படி கிழக்கு மாகாணக் கடற்படைத் தளபதி வசந்த கருணாகொடவிற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவுக்கு அமைய தயாரிக்கப்பட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு - கிழக்கு மாகாணக் கடற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் விடுதலைக்காக உண்ணாவிரதமிருந்து, உயிர்நீத்த தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று முதல் 26 ஆம் திகதி வரை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது.

தமிழ் மக்கள் மனங்களில் அழியாது வாழும் தியாகி திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்த நேரமாகிய 9.55 இற்கு கல்விக்கூடங்கள் பாடசாலைகள், பொது அமைப்புக்கள், முக்கிய பொது இடங்கள், நிறுவனங்கள், மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகிய இடங்களில் இந்த நிகழ்வுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தியாகி திலீபன் திருவுருவப் படத்திற்கு அலங்கரித்து மலர் மாலைகள் அணிவித்து திலீபனின் வரலாறுகளைச் சித்திரிக்கும் ஊர்தி பிரதேசம் பிரதேசமாக மக்கள் அஞ்சலிக்காகக் கொண்டு செல்லப்படும்.

இறுதிநாள் நிகழ்ச்சிகள் கோட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

தோல்வியில் முடிந்த படைக்கான ஆட்சேர்ப்பு

இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை, எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியைத் தரவில்லையென படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

நான்காயிரம் பேரைப் படைக்குத் திரட்டவென நடத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையில், 1900 பேர் மட்டுமே நேர்முகத் தேர்வில் தெரிவாகியிருப்பதாகவும் இவர்களது தொகைகூட வைத்தியபரிசோதனைக்குப் பின்னர் 1600 பேராகக் குறைவடையலாம் என்றும் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை, கடந்த மாதம் 18 ஆம் திகதி தொடங்கி 25 நாட்கள் நடைபெற்றன.

தற்போது இராணுவத்தில் பணிபுரியும் படையினர், தமது குடும்ப அங்கத்தவர்களை படையில் இணையுமாறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021. ~ 2223891 2226797
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

தென்னிலங்கை விளையாட்டு வீரர்களிடம்

யாழில் தேசிய விளையாட்டுவிழாவை நிறுத்த ஒத்துழைப்பு தரக் கோரிக்கை

தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடாத்தவிடாமல் தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு தாருங்கள் என, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை வீரர்கள், தென்னிலங்கை வீரர்களைக் கேட்டுள்ளனர்.

தேசிய விளையாட்டுவிழாவில் கலந்துகொள்வதற்காக தென்னிலங்கையிலிருந்து வந்துள்ள வீரர்கள் யாழ்.பீச் ஹோட்டலில் தங்கியுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் பயிற்சிகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.

நேற்றுக்காலை இவர்களைச் சந்தித்த யாழ்.மாவட்ட விளையாட்டு வீரர்கள், பயிற்சிகளை உடனே நிறுத்துமாறு, அவர்களைக் கேட்டுக் கொண்டதுடன் - சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடைநடுவில் முறிந்து போயுள்ளது. அரசு தமிழ் மக்களுடைய இயல்பு வாழ்விலே அக்கறை இல்லாமல் இருக்கிறது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழாவை நடத்தி அதன் மூலமாக சமாதானம் நிலைபெற்றுள்ளது என சர்வதேச உலகிற்கு காட்ட அரசு முனைகிறது. இந்த தாற்பரிய நிலையை தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள்.

உடனடியாக தாங்கள் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டுவரும் பயிற்சிகளை உடனே நிறுத்தி, மீண்டும் தென்னிலங்கை திரும்பவேண்டுமென்னக் கேட்கிறோம். நாட்டில் நிரந்தர சமாதானம் மலர அனைவரும் ஒத்துழைப்போம் என, யாழ்.மாவட்ட வீரர்கள் - தென்னிலங்கை வீரர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றை செவிமடுத்த தென்னிலங்கையைச் சேர்ந்த விளையாட்டு அதிகாரி தாம் பயிற்சிகளை உடனடியாக நிறுத்துவதாகவும், தென்னிலங்கை திரும்புவது தமது கைகளில் இல்லையெனவும் விளையாட்டுத்துறை அமைச்சே தமக்கு வேண்டிய போக்குவரத்து வசதியை ஒழுங்குசெய்யது தந்தவுடன் செல்ல முடியும் எனத் தெரிவித்ததையடுத்து யாழ்.மாவட்ட வீரர்கள் திரும்பினர்.

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசனி அம்மன் ஆலயத்தில் இந்து சமய விவகார அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட அன்னதான மண்டபத்தை அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்து வைப்பதையும் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி நிற்பதையும் படத்தில் காணலாம்.

கோப்பாய் கோட்டத்திற்கு உட்பட

பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

கோப்பாய் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் இந்தச் சுற்றுப்போட்டி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன.

மேற்படி சுற்றுப் போட்டித் தொடரில் இன்று 14 வயதுப் பிரிவுப் போட்டிகளில் உரும்பிராய் இந்துக் கல்லூரியை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரியும், அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தை எதிர்த்து புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயமும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

16 வயதுப் பிரிவுப் போட்டியில் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயத்தை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் வாரம், சர்வதேச சிறுவர் தினம் என்பவற்றினை ஒட்டி யாழ்.கோட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதியோர் வாரத்தினை முன்னிட்டு "முதியோர் அரும்பெரும் சொத்தாகும்" என்ற தலைப்பிலும், சிறுவர் தினத்தினை முன்னிட்டு "சிறுவர் களினை வேலைக்கு அமர்த்துதல்" என்ற தலைப்பிலும் இந்த கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை பாடசாலை ஊடாக அனுப்பிவைக்குமாறும், சிறுவர் தினப் போட்டிகள் 1 ஆம் திகதியன்று நடைபெறுமென்றும், முதியோர் வார போட்டிகள் ஒக்ரோபர் முதல் வாரத்தில் நடைபெறுமென்றும் யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் தங்கராஜா அறிவித்துள்ளார்.

நியமனம்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் புதிய செயலாளராக திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம்-யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் நியமனம் செய்யப் பட்டுள்ளார். (100)

சிறு விளம்பரம்

காணி விற்பனைக்கு

18 பனை மரங்களுடன் கைதடி மத்தியில் 6 பரப்பு காணி விற்பனைக் குண்டு. வீடு கட்டுவதற்கும், விவசாயம் செய்வதற்கும் உகந்தது. உடன் தொடர்பு கொள்ளவும். க.சசிகலா, நீர் வேல வீதி, கைதடி வடக்கு, கைதடி. (சி-1527)

நிறைஞ்சனலி சங்கானை

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடித்த

ராமன் தேடிய சீதை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

WISH MASTER

(கராட்டிப்படம்)

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல் குதூகல ஆரம்பம்

அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த

அதிபர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1424)

ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி ~ தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

குறைந்த கட்டணம்
குறுகிய தவணை

உங்கள் ஆக்கங்கள்
உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்

இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.

உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி
2223922
2225107

அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து தேசிய பிக்குகள் முன்னணி போராட்டம்

தேசிய பிக்கு முன்னணியினர் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பு உட்பட, 17 மாவட்டங்களில் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு வடக்கு - கிழக்கைத் தமிழீழம் என்னும் பெயரிலே பிரித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில் ஒப்படைக்கப்போகிறது எனக் குற்றஞ்சாட்டியே இந்தப் போராட்டம் நடாத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு ஒரு லட்சம் சிங்கள மக்களின் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினை, ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது. வடக்கு -கிழக்கைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரித்து, அவற்றிற்குத் தனித்தனி ஆளுநர்களை நியமிக்கும்படி, இந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

கொழும்பு புகையிரத நிலையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்படும் இந்த அமைப்பினர், ஜனாதிபதி மாளிகையைச் சென்றடைந்து, அங்கு மகஜரைக் கையளிக்க உள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

இந்த மகஜரின் பிரதி - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கையளிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துருகிரியவில் கண்டுபிடிக்கப்பட்ட

ஆயுதக் கிடங்கு பற்றிய விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும்!

அத்துருகிரியவில் இராணுவத்தின் விசேட பிரிவின் ஆயுதக்கிடங்கு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணைக்குழுவின் அறிக்கை அடுத்த மாதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் இறுதி அமர்வு கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்றபோது, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இது தொடர்பான ஆதாரங்களைச் சமர்ப்பித்திருந்தார்.

விசாரணைக்குழுவின் முன்னணியில் 69 பேர் சாட்சியமளித்தனர். இவர்களில் இராணுவத்தளபதி லெப்ரினட் ஜெனரல் லயனல் பலகல்ல, பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ மற்றும் திறை சேரிச் செயலாளர் சரித்த ரத்வத்த ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

அம்பாறையில் விசேட அதிரடிப்படையினருக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலைப் படத்தில் காணலாம்.

வட - கிழக்கில் எயிட்ஸை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எச்.ஐ.வி. வைரஸ் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது தொடர்பான உயர்மட்ட மாநாடொன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டச் சுகாதார சேவை அதிகாரிகள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை வடக்கு-கிழக்கில் எட்டு எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், நாடுமுழுவதும், 2 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக எதிர்பார்க்கப்படுவதாகவும், சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணத்திலேயே அதிகமான எயிட்ஸ் நோயாளிக்ள் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, தமிழ்நாடு அகதிமுகாமில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளில், 10 பேர் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்காகியிருப்பதாகத் தமிழ் நாடு சுகாதாரசேவை அமைச்சு - இலங்கை சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் லண்டனுக்கு செல்கிறார்

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் மயின் பிறெயின், அரசியமைப்புச் சட்ட அமைச்சர் பொல் பொனர் சாம் வரயா, வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திருமதி.ஏ.மோஸ் ஆகியோரைச் சந்திப்பதற்காக, இந்த வாரமளவில் அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் லண்டன் பயணமாவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் இலங்கையில் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி, பிரித்தானிய அரசியல்வாதிகளுக்கு விளக்குவதோடு, வெளிநாட்டு ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் முகமாகவே, இவரது விஜயம் அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பை உருவாக்க ஜே.வி.பி.முன்வரவேண்டும்

அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய கூட்டமைப்பினை அமைக்க, ஜே.வி.பி. முன்வரவேண்டும் என, நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான அனுரா பண்டாரநாயக்க நேற்றுமுன்தினம் சிலாபம் பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது, தெரிவித்தார்.

ஜே.வி.பியினர் தமது நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இன்று இலங்கை அரசியல் களத்திலே ஜே.வி.பி. மூன்றாவது பலம் மிக்க கட்சியாக உள்ளது. எனவே, அது தனித்து நின்று சாதிக்க நினைப்பதைவிட, சுதந்திரக் கட்சியோடு கூட்டமைப்பைத் தோற்றுவிப்பதன் மூலமாக நிறைய சாதிக்கமுடியும்.

ஜனாதிபதியும் இது தொடர்பாக ஜே.வி.பி.யினருக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் இந்தக் கூட்டமைப்புக்கு எதிரானவர்களாக உள்ளார்கள். அவர்கள், தமது நிலைப்பாடடை மாற்றாவிட்டால், அவர்களை கட்சியிலிருந்து விலக்கியாவது இந்தக் கூட்டமைப்பை உருவாக்கவேண்டும் எனவும் அனுரா தெரிவித்தார்.

பாடசாலை விடுமுறை நாட்களை வெகுவாகக் குறைக்க வேண்டும்!

கல்வி அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் பாடசாலை விடுமுறை தினங்கள் அதிகமாக உள்ளன. இது எமது பாடத்திட்டத்திற்குப் பொருத்தமற்றதாகவே இருக்கிறது. இதனால், பாடசாலை விடுமுறை தினங்களை வெகுவாகக் குறைக்க வேண்டும் எனத் தெரிவித்தார் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு.

இலங்கையின் பாடவிதானங்களின் அளவு அனைத்து தர மாணவர்களுக்கும் அதிகமாக உள்ளது. இதனால், அதிக விடுமுறைகளை நடைமுறைப்படுத்தும்போது, பாடத்திட்டங்களைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளது. இதனாலேயே, அதிகளவான மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் சித்தியடையத் தவறிவிடுகிறார்கள்.

நடந்துமுடிந்த க.பொ.த.(உ/த) 2003 ஆம் ஆண்டு பரீட்சையில் - 60 சதவீத மாணவர்களே சித்திபெற்றுள்ளனர். இவர்களே பல்கலைக்கழகக் கல்வியையோ அல்லது தொழிற்துறைக் கல்வியையோ பெறத் தகுதியுடையவர்கள். ஏனையோரின் எதிர்காலம் என்னாவது. எனவே, இனிவரும் காலங்களில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். இதற்காக விடுமுறை தினங்கள் குறைக்கப்படவேண்டும்.

தேர்தல் காலத்தில்கூட, பாடசாலைகள் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும். தவணை விடுமுறைகள் இனிவரும் காலங்களில் குறைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, முன்னாள் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன - தற்போதைய அரசு கல்வி முறையை ஒருபோதும் தனியார்மயப்படுத்தாது என்னும் நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்தார்.

ரிச்சட் பத்திரன சுதந்திரக் கட்சியிலிருந்து, ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவலாம் என எதிர்பார்க்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அதேசமயம், அரச ஊழியர்களுகான விடுமுறைகளும் விரைவில் குறைக்கப்படவுள்ளமையும் தெரிந்ததே.

ஐ.நா.அமர்வில் ரணிலே உரையாற்றுவார்

ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்வில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே உரையாற்றவுள்ளார் என, வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இந்த அமர்வு ஆரம்பமாகவுள்ளது. இதில் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி பிரதமர் உரையாற்றவுள்ளார். இந்த மாநாட்டில் பிரதமருடன், வெளிநாட்டு அமைச்சர் ரிரோன் பெர்ணாண்டோ கலந்து கொள்ளவுள்ளார் எனவும், வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

58 ஆவது முறையாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், உரையாற்றுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு - ஐ.நா.செயலாளர் கோபி அனான் அழைப்பு விடுத்தார் என முன்னர் ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யசுஷி -தொண்டமான் இன்று சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இன்று ஜப்பான் விசேட பிரதிநிதி யசுஷி அகாஷியைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அமைச்சர் கரு ஜெயசூரியவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் மேல் கொத்மலை நீர் மின் திட்டம் தொடர்பாகவே அகாஷியுடன் பேசவுள்ளார். இந்த நீர்மின் திட்டத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடுமையாக எதிர்த்து வருகிறது.

கொத்மலை நீர்மின்திட்டம் முன்னெடுக்கப்படுமானால் வட - கிழக்கைப் போன்று மலையகத்திலும் ஒரு போராட்டம் ஏற்படுவதைத் தடுக்கமுடியாது என ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

லஞ்ச ஊழல்களில் பாடசாலை அதிபர்கள்

(கொழும்பு)

நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருப்பதாகவும், இவ்வாறு குற்றஞ்சாட்டப்படுவோரில் கொழும்பிலுள்ள முன்னணிப் பாடசாலை அதிபர்களும் உள்ளடங்குவதாகவும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு எதிராக விரைவில் விசாரணைகள் நடத்தப்படும் என்று, லஞ்ச ஆணைக்குழுவின் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரிய தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர் சங்க நிர்வாகிகள் தெரிவாகினர்!

மன்னார் மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள அல் அசார் மத்திய மகா வித்தியாலயத்தில், காலை பத்து மணிக்கு, மன்னார் மாவட்ட கிராம உத்தியோகத்தர் பதில் தலைவர் ச.சில்வா தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

இதில் பிரமதவிருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விஸ்வலிங்கம், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.நீக்கிலாப்பிள்ளை ஆகியோரும் மற்றும் வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, களுத்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர், மன்னார் மாவட்டத்திற்கான கிராம உத்தியோகத்தர் சபைக்கான தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக எம்.எஸ். சில்வாவும், செயலாளராக ஈ.ஜே. மிராண்டாவும், பொருளாளராக எஸ்.இ.குரூஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன், மன்னார் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் தலா இருவர் சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். • (201)

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஜப்பான் விசேட தூதுவர் யசுஷி அகாஷியைச் சந்தித்தபோது எடுத்துக்கொண்ட படம்.

சனசமூக நிலைய மைதானம் விரிவாக்கப்பட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானம் விரிவாக்கப்படவுள்ளது. சனசமூக நிலையம் அமைந்துள்ள மைதானத்துக்குள் நீண்டகாலமாகக் குடியிருந்த குடியிருப்பாளர்களுக்கும், சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட சமரச முயற்சியினையடுத்து, சனசமூக நிலைய மைதானம் விரிவாக்கப்படவுள்ளது.

கடந்த இருதசாப்த காலமாக ஈச்சமோட்டை சனசனமூக நிலைய நிர்வாகத்தினருக்கும், மைதானக் காணிக்குள் இருந்த குடியிருப்பாளர்களுக்கும் இடையில் பிணக்குகள் ஏற்பட்டிருந்தன. தற்போது, இந்தப் பிணக்குகள் நிர்வாகத்தினரின் சமரச முயற்சியால் தீர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், ஈச்சமோட்டை மக்கள் வழங்கிய நிதியுடன், இந்து கலாசார அமைச்சு வழங்கிய நிதியும் சேர்த்துக் குடியிருப்பாளர்களுக்குக் கொடுக்கப்படவுள்ளதாக, சனசமூக நிலைய வீட்டாரங்கள் தெரிவித்தன.

(58)

யாழ்.மாவட்டத்திலுள்ள சனசமூக நிர்வாகிகளுக்கு விசேட பயிற்சி நெறிகள்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாகிகளுக்கான விசேட பயிற்சிநெறி - எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் செயற்படும் நிர்வாகிகள் மட்டுமே, இந்தப் பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால், அவர்கள் தொடர்பான விபரங்களை உட்ன் அனுப்பி வைக்குமாறு, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர்களை - அபிவிருத்திக்கான கழக நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொள்வோருக்கு உணவு, தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்துச் செலவு ஆகியன வழங்கப்படும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

யாழ்.தேசிய எழுச்சிப் பேரவையின் முதல் சங்கம நிகழ்வு நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் முதல் சங்கம நிகழ்வு - நேற்றுமுன்தினம் 3 மணியளவில் யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கேட்போர் கூடத்தில் - தேசிய எழுச்சிப்பேரவையின் யாழ்.பிரதேச செயலாளர் த. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச் சுடரினை மகளிர் பிரிவைச் சேர்ந்த சாரதா, மாவீரரின் தந்தையார் லோறன்ஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினை யாழ் - நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றிவைத்தார்.

யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கயல்விழி, கோட்டச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம், மாவட்டச் செயலாளர் சூ.சிறில், மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த க.சிவராசா, யாழ்-நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து யாழ்.பிரதேசத்தின் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக, முன்மொழிவுகள் ஊரக கிளைகள் ஊடாக முன்வைக்கப்பட்டன. இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புகொண்டு, நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருதயநாதர் ஆலயம் புனரமைப்பு

யாழ்மடம் வீதியில அமைந்துள்ள- இருதயநாதர் சிற்றாலயம் அந்தப் பகுதி பங்கு மக்களால் திருத்திய மைக்கப்பட்டு வருகிறது. இதற்கான நிதியினை ஆலயப் பங்கு மக்கள் வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள வீதியில், ஒரு பகுதி பள்ளமாகக் காணப்படுகிறது.

(100)

எம்மை எவரும் ஏமாற்ற நினைத்தால் விளைவு கடுமையானதாக இருக்கும்

வலிகாமம் கோட்ட பொறுப்பாளர் தமிழ்மறவன் உரை

(யாழ்ப்பாணம்)

சிங்களதேசம் இனியும் எம்மை ஏமாற்றமுடியாது, நாமும் ஏமாறமாட்டோம். அப்படி எம்மை ஏமாற்றுவதாக இருந்தால், அரசு தக்க விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும். இவ்வாறு வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற, உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் சங்கம நிகழ்விலேயே - அவர் இதனைத் தெரிவித்தார். முன்னதாகத் தேசியகொடியினைத் தமிழ்மறவன் ஏற்றிவைக்க, பொதுச்சுடரினை மாவீரர் குணாவின் தந்தையார் ஏற்றி வைத்தார்.

தமிழ்மறவன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்- இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலே வாழும் தமிழ்மக்களுக்குக் கிடைத்த ஒரு தலைவரைப்போல, ஏனைய நாடுகளுக்குக் கிடைக்கவில்லை. ஒரு ஒப்பற்ற தலைமையைக் காலம் எமக்குத் தந்துள்ளது. இந்தத் தலைமையினுடைய வழிகாட்டலை நாம் சரியாகப் பயன் படுத்தி, எமது விடுதலையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிங்களதேசம் ஒருபோதும் எம்மை ஏமாற்றமுடியாது. அப்படி ஏமாற்றுவதாக இருந்தால், சந்திரிகா அம்மையாரோ, ரணில் விக்கிரம சிங்கவின் அரசோ தகுந்த பின்விளைவுகளைச் எதிர்நோக்க வேண்டி வரும். இது அரசுக்குப் புரியாமலில்லை. நாங்கள் தற்போது பலம் மிக்க கட்டமைப்புக் கொண்ட இயக்கமாகப் பரிணமித்துள்ளோம்.

எமது தாயக கட்டுமானப் பணியிலே, தேசிய எழுச்சிப் பேரவை முதன்மை இடம் வகித்துள்ளது. இதனாலேயே, ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும், அந்த அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இவை அந்தந்தப் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்குப் பாடுபடும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் -மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, வலிகாமம் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சாம்பசிவம், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் -மானிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் வலிகாமக் கோட்டப் பொறுப்பாளர் தமிழ்மறவன் தேசியக்கொடியினை ஏற்றுவதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட எழுச்சிப் பேரவைப் பிரமுகர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : இ.வபீசன்
முகவரி : 37/18, சிறி கல்யாணி, சங்கரய மாவத்தை, கொழும்பு-15

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில்

சைவசமயபாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் தரம் 11 இல் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவசமயப் பாடக் கருத்தரங்கு - எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு - 'சைவசமயத்தின் தொன்மையும் வழிபாட்டுமுறைகளும்' பற்றியும்,

இளைப்பாறிய அதிபர் சு.செல்வத்துரை 'சமயக்குரவர்களும் திருமுறைப் பாடல்களும்' என்ற பொருளிலும்,

சைவப்புலவர் மு.திருஞானசம் பந்தபிள்ளை 'சந்தானகுரவர்களும் மெய்யியல் தத்துவங்களும்' என்ற பொருளிலும் கருத்துரையாற்றவுள்ளனர்.

கருத்தரங்கில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தரம் 10, 11 ஆகிய சைவசமயப் பாடநூல்களையும் எடுத்துவருமாறு, நேற்று செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

ஈழத்து கூத்து விழா நேற்று நிறைவுபெற்றது

யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற- ஈழத்து கூத்து விழாவின் இறுதிநாள் நிகழ் வுகள் நேற்று நடைபெற்றன.

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி. மௌன குரு கலந்துகொண்டார். அவர் "முன் நோக்கிய பாய்ச்சலும் பின் நோக்கிய தேடலும்" என்னும் தலைப்பிலே, தனது கருத்துரையை வழங்கினார்.

அதனை அடுத்து "நாட்டுக் கூத்தின் எதிர்காலப் பேணுகையும், தேசிய அரங்கை நோக்கிய செயல் நகர்வுகள்" என்னும் தலைப்பிலே, கலந்தாய்வும் இடம்பெற்றது. இந்தக் கலந்தாய்விலே பலரும் தமது கருத்துரைகளை வழங்கினர்.

அத்துடன் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் தனத்தை நிலைபெறச் செய்வதற்குக் கூத்துக்கலையின் வளர்ச்சியும், எழுச்சியும் அவசியம். அது தேசியக் கலையாக மாற்றப்படவேண்டும் என்னும் தொனிப் பொருளில், பலரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

முகவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புப் பொருட்களுக்கு யாழ்ப்பாணத்தில் முகவர்களாகச் செயற்படும் வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, பளையிலுள்ள வருவாய்த்துறைச் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில்- கொழும்புப் பொருட்களுக்கான முகவர்களாகச் செயற்படும் அனைத்து வர்த்தகர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, நிதித்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

தலைப்பு

சிணுங் சிணுங்கெனத் தொலைபேசி பாடிற்று. இவளுள் பதற்றம் உள்ளூரிற்று. அவளுக்குத் தானோ...? சிவராமன் தொலைபேசியை எடுப்பது தெரிந்தது. மிகத்தீவிரமாய் அவள் ஏதற்கோ பதில்சொல்லித் தலையாட்டிக்கொண்டிருந் தார். இவரிடம் கடுதியாய் ஒரு தொய்வு. பெருமூச்சு அனலாய் கிழம்பிற்று. கணக்குப் புத்தகங்களுக்குள் கணக் கிடும் வேலையை வலதுகை செய்துகொண்டிருந்தது. இடதுகைக்குள் நசநசவென்று வியர்வை பூத்தது. அதற்குள் இறுகப்பற்றிய ஒரு பேனா. வெள்ளி நிற ஷலோற்ரேப் சுற்றப்பட்டிருந்தது. கையை விரித்து அந்தப்பேனாவை ஆதரவாய்ப் பார்த்தாள் கிருத்திகா. மீண்டும் அதைத் தொட்டு வருடினாள். கணக்குப் புத்தகங்களில் கையொப்ப மிட்டு, திகதியிட்டு இயந்திரத்தனமாய் அதை சுவர்ணாவிடம் தள்ளினாள். உள்ளே வருத்திப் பிடுங்கும் சிந்தனை மூட் டங்களோடு, கையிலுள்ள பேனாவை புரட்டிக்கொண்டிருந் தாள்.

சுவர்ணா திடீரென்று இவள் பக்கம் திரும்பினாள்.

'என்ன கிருத்திகா திகதி போடேக்கை 2001 ஆம் ஆண்டு என்று போட்டுக்கிடக்கு...'

"2001 தானை..."

"என்னது..."

"2001 ஓ ஓ... 2001 இல்லை. 2003 மாறிப்போட்டிட் டேன்..." சுவர்ணா பரிகாசமாய் சிரித்தாள்.

" கிருத்திகாவிற்கு 2001ஐ விட்டுவிட்டு வர இயலாமற் கிடக்கு..." சுவர்ணா, கிருத்திகாவிற்குக் கூறுவது மங்கலாய் கேட்டது.

"ஓம் ... ஓம்... என்னாலை 2001 விட்டுட்டு வரஇயலாமல் தான் கிடக்கு..."

கத்தவேண்டும் போலிருந்தது. யாரிடம் கோபம்... ? எதற்காக இந்த அகங்காரம். மனதில் பலவீனம் - மற்றவர் கள் மீது கோபமாய் வெளிக்கொள்ளப் பார்க்கிறதோ...?

உள்ளுக்குள், இருட்டு மேகங்கள் முட்டித் தள்ளும் வேகத்தில் இடியும் மழையும் கொட்டின. அவளால் அதிர்வு களின்றும் மீளமுடியவில்லை. தொடர்ந்து சிவராமன் பேசி முடித்துவிட்டார். தொலைபேசி நல்ல பிள்ளையாகி மேசை மேல் கிடந்தது. அவள் அதையே பார்த்துக் கொண்டிருந் தாள்.

"என்ன கிருத்திகா"

"தலையிடிக்குது..."

"பனடோல்..."

வேண்டாம் பாப்பம்..." அவள் தலை கவிழ்ந்து மேசை யில் படுத்தாள். குமுறி அழவேண்டும் போலிருந்தது. உள்ளே விம்மல் சுக்கல்களாகிக் கொண்டிருந்தது. இந்த இறுக்கமும், மன அழுத்தமும் சேர்ந்து, விரைவில் தலைவ லியைக் கொண்டுவரலாம். ஏக்கமும், தவிப்புமுற்றி, பசி, தூக்கமற்றுப்போய் தலைவலி மண்டையைப் பிளப்பது வழக்கமாகிப் போனது. அடிக்கடி இந்தத் தவிப்பு உள்ளுக் குள், கவிந்து விலகிப்போவது தானென்றாலும், இப்போது அதன் அடர்த்தி கணிசமாய்க் கூடிவிட்டது.

இலக்கியச்சோலை

ஒரு வருஷமாய் அவனைப் பார்க்க முடியவில்லை. பார்த்ததெல்லாம் அவனது கடிதங்கள், எழுத்துக்கள் மட் டுமே... அந்தக் கடிதங்கள் தான் பிரிவுத் தீயை ஆற்றும் குளிர்நீராகியிருந்தன. இருந்தாலும், அந்த முகத்தைப் பார்க்கவேண்டும் என்னும் தவிப்புக் குறைவதாயில்லை. அந்தக் குரலைக் கேட்கவேண்டும் என்கின்ற ஏக்கமும் வடிவதாயில்லை. திடீர் திடீர் என்று அவளது பலமனைத் தும், அவனது நினைவுகளாலேயே உறிஞ்சப்பட்ட பிறகு செயலற்றிருப்பதின்றி அவளால் எதுதான் முடியும்?

அன்று எழுந்தபோதே, மனதுக்குள் ஒரு நெருடல். எதுவும் சரியில்லையென ஒரு உணர்வு. குளிப்பதற்குத் தண்ணீர் அள்ளியபோதும், 'சறுக்'கென்று கப்பிக்கயிறு கையைவிட்டு, விலகிப்போயிற்று. பொத்தென்று வாளி நீர்ப்பரப்பில் மோதியெழுந்த, நீர்ச்சலனங்களின் ஓசை அடங்கியபின்னும், அவளது மனத்தினோசைகள் அடங்க வில்லை.

தினமும் எழுதிப்பார்த்துவிட்டு, மேசையிலே பத்திர மாய் வைக்கின்ற அந்தப் பேனா அன்றும் அவளை ஏக்கத் தோடு பார்த்தது. அதை அவள் யாருக்கும் கொடுக்காமல் எவ்வளவு பத்திரமாய் பாதுகாத்தாள். அவன் வாங்கிக் கொடுத்த அந்தப் பேனா, அவனது ஞாபகத்தைப் புதிதுபுதி தாய் அவளுள் உயிர்ப்பித்துக் கொண்டிருந்தது. அதனை ஆசையோடு அவள் எடுத்துப் பார்த்தபோது, கைதவறிக் கீழே விழுந்தது. பேனாவின் கண்ணாடிக்குழாயில் வெடிப்பு. இவளுள் இதயமே வெடித்துப் போயிற்று. கண்களுக் குள்ளே நீர் குமிழியிட்டது. பக்கென்று உருண்டு கொண்டி ருந்த பேனாவைப் பொத்தி எடுத்தாள். தடவிக்கொடுத்தாள். மூடிதிறந்து எழுதிப் பார்த்தாள். தடங்கலின்றி எழுதியது. அப்பாடா... மூச்சுவிட்டாள். எனினும், உடைந்துபோன பேனாவைப் பார்க்கையில், அவளுள் தவிப்பு ஏறிற்று. இது என்ன அபசகுனமோவென... விக்கல்களுள் கண்ணி மைகள் தோய்ந்தன.

கிணுங்.. தொலைபேசி மீண்டும் இவள் கை எழுதுவதை நிறுத்தியது. இடதுகை தனக்குள்ளிருந்த பேனாவை வருடிக்கொண்டிருந்தது. இப்போதும் சிவராமனே கதைத் துக்கொண்டிருந்தார். அவர் மேல் ஏனோ எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

அன்று மனதுக்குள் ரணம், ரணமாய்க் காயம். அத்தோடு நின்றிருக்கலாம். கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறவழி கிடைத்தி ருக்கும். போதாக்குறைக்கு அவள் கையில் வைத்திருந்த பேனாவைப் பார்த்து, சுவர்ணா கேலிசெய்ய ஆரம்பித்தபோது, வலி மேலும் புகையத் தொடங்கியது.

"கிருத்திகா... கோல்..."

சிவராமன் கூப்பிட்டார். இவள் எழுதிக்கொண்டிருந்ததை மேசையில் போட்டுவிட்டு, தொலைபேசியை நோக்கி ஓடினாள். பதட்டமாய் இடக்கைக்குள்ளிருந்த பேனாவை அழுத்தித் தேய்த்துக் கொண்டாள். வேர்வையைத் துடைத்துக் கொண்டே தொலைபேசியை எடுத்தாள். பதட் டத்தில் நெஞ்சு படபடத்தது.

"ஹலோ... நான் சசி..." இவளுள் சட்டென்று வெறுமை பரவ, தொலைபேசியை விட்டெறிந் தால் என்ன எனத் தோன்றிற்று.

"ச்சே..." உள்ளுக்குள் பொங்கியெழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு, உள்ளுக்குள் ளேயே அமுங்கிப்போனது.

"ஹலோ... ஹலோ..."

"ம்... ம்..."

சசி ஏதேதோ சொன்னாள். இவள் 'ம்' கொட்டினாள். சோர் வாய் இருக்கைக்கு வந்தாள்.

"பக்கத்திலையிருக்கிற சசி வந்து கதைக்கேலா... கோல் எடுக்கோணுமாம்..."

சலிப்பாய் முணுமுணுத்தாள்.

"என்னவாம் சசி?"

சுவர்ணா கேட்டாள்.

"என்னவோ ஏதோ அலம்பின வன்..."

கிருத்திகா பொத்தென்று இருக்கை யில் அமர்ந்தாள்.

"எவ்வளவு பேர் கோல் எடுக் கினம், அவர் மட்டும் எடுத்தாள் என்னவாம்?"

முட்களாய் கீறும் வலி.

"நம்பர் தெரியும் தானை..."

அவன் மேல் முரண்டும் கோபம்.

"சிலவேளை லைன் கிடைக் கேல்லையோ..."

கோபத்தை வெல்லும் பரிவு.

"ஐயோ, பேனை உடைஞ்சு போச்சு. அவருக்கு அங்கை என் னென்ன கஷ் ரமோ...?"

கேள்விகள் குழம் பக் குழம்ப உள்ளூ றும் வலி.

"என்ன கிருத் திகா...?"

மீண்டும் மீண்டும் சுவர் ணாவின் பிடுங் குதல்.

"ஷோட் லீவிலை போகப்போறன்..."

"ஓமோம் இஞ்சை நிண்டு 2003 இற்குப் பதிலாக, 2001 போடாமல், போய் நிலாக்ஸா திரும்பி வா..."

போய் என்னதான் செய்வது?

அவனுக்குக் கோல் எடுக்கலாமோ?

ஷோட் லீவு கொடுத்துவிட்டு, வெளியே வந்தாள். ஒரே வெம்மையாய் வெய்யில் கொளுத்தியது. இவள் விரைவாய் நடந்தாள். அருகிலிருந்த கொமியூனிக்கேஷன் நோக்கி நடந்தாள். அங்கிருந்த பெண்ணிடம் நம்பரைத் தந்துவிட்டுக் காத்திருந்தாள்.

திடீர் திடீர் என்று திரும்பிப் போய்விடலாமோ என்று தோன்றிற்று. அலுவலகத்தில் யார் யார் இருப்பார்களோ? அவசரத்துக்கு நம்பர் வைத்திருந்தபோதிலும், இதுவரை கதைத்துப் பழக்கமும் இல்லை. கைக்குள் நெருடிக்கொண்டி ருந்த பேனாவைப் பார்த்தாள். கண்ணை முட்டிக்கொண்டு கண்ணீர் வந்தது. இவ்வளவு கவனமாய் வைச்சிருந்தும் அவர் தந்த பொருள் இப்படியாச்சுதே. அவ்வளவோடு போகட்டும். அவருக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாமலிருந்தால், அதுவே போதும். மனது இஷ்டதெய்வத்தை வேண்டிக்கொண்டது. உச்சபட்சத் தவிப்பு நெஞ்சுப்பரப்பை முழுமையாய் ஆட்கொண் டது.

"அக்கா இரண்டாவதுக்கை போங்கோ..." அவள் பரபரப் பாய் எழுந்து, இரண்டாவது பூத்தினுள் நுழைந்து, கதவைச் சாத்தினாள்".

"ஹலோ..."

"ஹலோ..." அது அவனது குரலில்லை.

"விசாகனைக் கூப்பிடுவீங்களா..."

சற்றுநேரம் அங்கே அவனைக் கூப்பிடுகிற ஆரவாரங்கள், சிறிதே மௌனம்.

"ஹலோ..." மிருதுவாய், அவளது பதட்டத்தையும், படபடப் பான வியர்வையையும் கழுவிக் கரைக்கின்ற தென்றல் காற் றாய் அவனது குரல். அந்தக் குரலைக் கேட்ட நெகிழ்வில், அவள் பேச்சற்று நின்றாள்.

"ஹலோ... ஹலோ..."

அவள் மீண்டும் உலுப்பினான். அந்தக் குரலை அப்படியே கேட்டுக்கொண்டு நிற்கலாம் போலிருந்தது. அவன் வைத்துவிடக் கூடாதென ஏற்பட்ட அவசரப் பரபரப் பில் குழைவும், பரிவும் ஊடுருவின.

"என்ன கிரு... ஏதும் பிரச்சினையே..."

அவளால் எதுவும் சொல்லமுடியவில்லை.

"கிரு... நிக்கிறீர்தானை..."

"ம்... நல்லாயிருக்கிறீங்களோ...?"

"ஓம்... எப்ப வருவன் எண்டு கிடக்கு...?"

அவளுக்குள் பாரம் இறங்கினாற்போலிருந்தது, தலை லேசானது.

"ட்ரான்ஸ்சர் கிடைச்சிடுமா..."

"கிடைச்சிடும்..."

"அப்ப வைக்கட்டுமா..."

"இந்த ரெண்டு வரி கேக்கவா எடுத்தனீர்..."

அவன் இன்னும் கதைக்க ஆசைப்பட்டான். தொலை பேசி வழியாய் தன் காதலை வழியவிட்டான். அவளுக்கும் சொல்ல எவ்வளவோ இருந்தது. ஆனால், அந்தத் தொலை பேசியால், அவளது மன உணர்ச்சிகளை... தவிப்புகளை, தாபங்களை, மௌன உச்சரிப்புகளை மொழிபெயர்க்க முடியுமா...?

"கஷ்ரமா இருக்கப்பா, கெதிலை வாங்கோ..."

அவள் தொலைபேசியை வைத்தாள். காசைக்கொடுத்து விட்டு, வீதிக்கு வந்தாள். இப்போது வெய்யிலின் வெம்மை லேசாய்க் குறைந்தது போலிருந்தது. அலுவ லகத்துக்குத் திரும்பியபோது, அவரவர் தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருந்தார் கள். இவள் வந்து மேசையில் கவிழ்ந்து உட்கார்ந்தாள். கண்களின் எரிவு குளிர்வாகும் மட்டும் கண் களை மூடித் திறந்தாள். மனங் குளிரக் குளிர தொலைபே சியில் அவன் சொல்லி யவை மனதுக்குள் சாமரமாய் வீசின.

சந்தோஷத்தில் அழவேண்டும் போலி ருந்தது. மெல்லிய கோடாய்க் கண்களில் கண்ணீர் படர்ந் தது. இன்னும் எத்தனை நாளைக்கு இந்தத் தவிப்பு என்பதாய் ஏக்கம் எழுந்தது. கண்களில் வழியும் நீரோடு சேர்ந்து, மனப்பாரமும் வடிய

சிறுகதை

வடிய மனம் இலேசாயிற்று. மெல்லக் கண்களைத்துடைத் துவிட்டு எழுந்தாள். மேசையில் செய்த குறையிலிருந்த கணக்குப் புத்தகங்களை ஒருபுறமாய் எடுத்து வைத்தாள். மூன்று நாளாய் செய்யாத வேலைகளை இன்றோடு முடித்து விடலாம். சுவர்ணா இவளை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

"பனடோல் போட்டதுபோலை..."

"இல்லை டொனிக் குடிச்சேன்..." கிருத்திகா மெல்லி சாய் சிரிக்க முயன்றாள்.

"டொனிக்கா..."

ரமணி வியந்தாள்.

"இவளுக்கு ஷோட் லீவே, டொனிக்கா மாறீட்டுது..."

சுவர்ணா விளக்கினாள்.

"கிழமைக்கொரு தரம் டொனிக் குடிச்சா எனக்கேன் தலையிடி வருது...!"

கிருத்திகா முணுமுணுத்தாள்.

சுவர்ணாவும், ரமணியும் சத்தமாய்ச் சிரித்தார்கள்.

கிருத்திகா சிரிக்கவில்லை. ஆனால், இன்னும் சற்று நேரத் தில் தானும் சிரிக்கக்கூடும் என, அவளுக்குத் தோன்றியது.

தாட்சாயணி

கிழக்கும் மேற்கும்

ஔவையார் - சேர்க்கீரட்டீஸ்

வருத்திடும் பசியுடன்
வழிநடந்த ஔவை
இடைக்குலச் சிறுவனாம்
அசதியைக் கண்டார்!
தன்பசி போக்கவே
கொணர்ந்திட்ட கூழினை
ஔவையின் பசிகண்டு
அவருண்ணக் கொடுத்தான்
அன்புடன் அசதி!
கூழுண்டு பசிதீர்த்த
ஔவைப்பாட்டி
'கோவை' பாடியே
அசதியை வாழத்தினார்!
அவனியெங்கும் பரவியது
அசதியின் புகழே!

நெல்லிக்கனியின்
மகிமையினாலே
பன்னெடுங்காலங்கள்
பாரினில் வாழ்ந்து
மூதுரை – நல்வழி
ஆத்திசூடி
கொன்றைவேந்தன்
இன்னும் பற்பல
நீதி நூல்களை
தமிழுக்கும்
தமிழர்க்கும்
தரணிக்கும் தந்த
ஔவைப்பாட்டி –
கணநாதனுடைய
கருணையினாலே
கைலையங்கிரியினைக்
கணத்திலடைந்தவர்
கைலாச நாதனின்
கழலிடை சேர்ந்தார்!
கனியுண்ட திறத்தினால்
கனிதந்த வரத்தினால்
தமிழுடன் கலந்தவர்
தமிழரில் கலந்தவர்
தமிழாக வாழ்கிறார்!
தமிழாக வாழ்வார்!!

'போற்றிடும் வேதாந்தத்தை
சுவர்க்கத்திலிருந்து இந்த
அவனிக்குத் தந்தவர்' என்று
ஐரோப்பியரால் இன்றும்
போற்றுதற்குரிய
கிரேக்க ஞானி!
ஏதேன்ஸ் நகரினில்
தோற்றம் பெற்றவர்!
தம்மிள வயதினில்
போரில் கலந்தவர்!
அரசினிலும் அவரோர்
உறுப்பினராவர்
பின்னர் அனைத்தையும்
உதறித்தள்ளினார்!
உள்ளம் தெளிந்ததால்
இறை பக்தி மிகுந்தது!
இறையருள் பெற்றவர்!!
ஆத்மா பற்றியும் –
இறப்பின் பின் ஆத்மா
பெறும் நிலைபற்றியும் –
இது தொடர்பாய்ப்பல
அரும்பெரும் கருத்துக்கள்
ஆய்வின்பின் விளக்கினார்!
இவர் கூறும் அனைத்தையும்
இவரின் சீடனாம்
பிளேட்டோ கருத்துடன்
பதித்துக் கொண்டவர்
எழுத்தினிற் பதித்தார்!

(தொடரும்)

முருகு

ஓரிடம்

தூரத்திலோர் புள்ளியென் விழிகளுக்குத்
தோன்றி மறைந்திற்று.
மீண்டுமப் புள்ளியின்பால்... ஓரீர்ப்பென்
மனதினில் புகுந்ததன் மகத்துவம் அறியலானேன்.
இடையிடையே தோன்றி மறைந்தவப் புள்ளி
இந்நாளிலோர் கோளாக வியாபித்து
அதிற் பிறந்த முதல் மனிதனாய்... நான்
எனது இயக்கத்துக்கான மூலமாய் அது.

தொடமுடியாத தூரத்தில்...
விழிகளுக்கு மட்டுமே தெரிந்த காலங்களில்...
மாற்றமொன்றும் என்னிலில்லை.
நான் எப்போது 'நீல் ஆம்ஸ்றோங்'காய் மாறினேனோ
அன்றிலிருந்து என்னுள் ஏதோ?
பற்பல மாற்றங்கள் உதயமாகலாயிற்று.
அம்மாற்றங்களே இப்போதுதென்னை,
வனாந்தரவெளிகளில்... இட்டுச்செல்கிறது.
ஆனாலும்...
பயணங்களாக அவை நிகழவில்லை.
எப்போதோவோர்நாள் நிகழவிருக்கும் அந்நிகழ்வை மட்டும்,
இப்போதெனக்கு நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறது.
இப்போது நான் எனக்கான இடத்தில்...
இல்லாவிட்டாலும்; நாளை
எனக்கான இடத்திற்தான் இருக்கப்போகிறேன்.
என்னுணர்வை ஆட்கொண்ட அச்சிறிய புள்ளி
கோளாகவே இருக்கப் போகிறது.
நான் இருக்கப் போவது...
அதிற்பிறந்த முதல் மனிதனாய்... மட்டுமல்ல.
அதிலிருந்த முதல் மனிதனாயுந்தான்!

சு.க.சிந்துதாசன்

வினைச்சேனை

சிரிப்பு

எல்லோரும் நன்றாக இங்கே சிரிக்கிறீர்கள்.
எல்லோரும் எதுஎதுக்கோ
ஏனேனோ சிரிக்கிறீர்கள்.
நீங்கள் புனைகின்ற விநோத உடைகளைப்போல்,
நீங்கள் தடவுகின்ற செயற்கையான வாசனைபோல்,
நீங்கள் தலையிலிடும்
புதிய இரத் தொப்பிகள் போல்,
நீங்கள் எவரெவரோ அணிவதனைப் பார்த்தணிந்து
தடக்கிவிழ வைத்த செருப்புகள் போல்,
வாய்களிலே
சிரிப்பை வகைவகையாய்ச்
செருகிச் சிரிக்கிறீர்கள்.
உங்கள் சிரிப்புகளில் உண்மையை நான் காணவில்லை.
உங்கள் சிரிப்புகளில் உயிர்ப்பினை நான் காணவில்லை.
உங்கள் சிரிப்புகளில் குரூரத்தை,
கபடத்தை,
ஏமாற்றி வென்ற இறுமாப்பை,
பொறுமையினை,
வீழ்த்தியேய்த்த கொக்கரிப்பை,
வேடத்தைக் காண்கிறேன்.
நீங்கள் சிரிப்புகளைப் புதிது புதிதாக
நாகரிகத்துக் கேற்ப நவமாகத் திட்டமிட்டுத்
தயாரித் தணிந்து
'சுயசிரிப்பை' அடகுவைத்தீர்.
உங்கள் சுயசிரிப்பை மீட்க மறந்துவிட்டீர்.
உங்கள் இதழினோரம்...
ஒரு குழந்தைச் சிரிப்புதனை
மெய்மையன்பு வாழும் ஞானிகளின் சிரிப்புதனை
விடிகாலை வேளையிலோ...
விழும் அந்தி மாலையிலோ...
இயற்கையெனுங் காதலியாள் இழைக்குஞ் சிரிப்புதனை,
காணவேண்டும் என்றுதானே
கவிதையில்நான் ஏங்குகிறேன்.

த.ஜெயசீலன்

நூல் அகம்

ஆற்றுகை

"ஆற்றுகை" எனும் பெயரில் யாழப்பாணம் திருமறை கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தினர், மாதாந்த இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றனர். இந்த இதழின் செப்ரெம்பர் மாதத்திற்குரியதும், 11 ஆவது இதழும் தற்போது வெளிவந்துள்ளது.

ஈழத்து கூத்து விழா தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில், இந்த நூலின் 11 ஆவது இதழ் வெளிவந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த யோ.ஜோன்சன் இராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகியோரே ஆசிரியபீடத்தில் அமர்ந்திருந்து, இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

இம்மாதம் வெளிவந்துள்ள நூல் "நாமும் நமக்கோர் நலியாக்கலையுடையோம்" என்னும் மகாகவி உருத்திர மூர்த்தியினுடைய கவிதை வரிகளில் ஒன்றை, மகுட வாக்கியமாக கொண்டு வெளிவந்துள்ளது.

"நமது தேசியம்" பற்றி பல வழிகளிலும் சிந்திக்கும் நாம், நமது தேசியக்கலைகள் பற்றியும் சிந்தனை செலுத்தவேண்டும் என ஆசிரியர் உள்ளத்தில் இருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

"நாடகமும் அரங்கியலும்" - பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது இந்நூல். நாடகத்துறை சார்ந்த பல கலைஞர்கள், ஆசிரியர்களுடைய கட்டுரைகளும், கருத்துக்களும் நூலின் அகத்தே பொறிக்கப்பட்டுள்ளது.

"மலையகத்தில் நிகழ்வலைகள்" எனும் தலைப்பிலே அன்ரனி ஜீவாவினால் எழுதப்பட்டுள்ள கட்டுரையில், மலைய மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட கலைகள் பற்றி ஆழமாக ஆராயப்பட்டுள்ளது.

கந்தையா சிறிகணேசனால் எழுதப்பட்டுள்ள "சடங்கு, நடனம், நாடகம்" எனும் தலைப்பிலான கட்டுரையிலே, பல்வேறு விடயங்களும் தொடப்பட்டிருக்கின்றன.

கட்டுரையின் ஓர் இடத்திலே சிங்களவருக்கு தேசிய நடனமாகக் கண்டிய நடனம் உருவாகியதுபோல, ஈழத் தமிழர்களுக்கும், தென்னிந்திய பரத நாட்டியத்திற்கு புறம்பாக, ஒரு தேசிய நடனம் கட்டமைக்கப்படவேண்டும்" எனக் கூறியிருப்பது சிந்தனைக்குரிய விடயமாகும். இக்கட்டுரையிலே கால பரிமாணங்களோடு, எவ்வாறு கலைகளின் வடிவங்களும், எடுத்தாளப்படும் விடயங்களும் மாற்றம் பெற்றன என்பதும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஈழத்து இசைநாடகத்துறையில் மட்டுமன்றி, நாடு கடந்தும் குறிப்பாக இந்திய இசைநாடக விற்பனர்களாலும், பாராட்டப்பெற்ற ஈழத்து இசைநாடகத்துறை முன்னோடி எம்.வி.கிஷ்ணாழ்வார் பற்றி, பா.ரகுவரன் அமைத்துள்ள கட்டுரை - அரிய பல தகவல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த "ஆற்றுகை" இதழிற்கு முத்திரை பதித்தாற்போல், சகோதர இனக்கலைஞர் ஜெரோம் டி சில்வாவின் பேட்டி அமைந்துள்ளது. ஆங்கில நாடகத்துறையினுடைய கர்த்தாவாகிய ஜெரோம் டி சில்வா ஒரு இடத்திலே "என்னுடைய அனுவத்திலே, தமிழ் இளைஞர்கள் பல பிரச்சினைகளைத் தாண்டி வந்தவர்கள்" என்ற வெளிப்பாட்டைக் காணமுடிகிறது. குறிப்பாக, யுத்த அனுபவம் அவர்களை வெகுவாக மாற்றியுள்ளது என்று கூறுவது கவனத்தை ஈர்க்கிறது.

ஆற்றுகை எனும் தலைப்பிலே - பூமிகா படைத்த படைப்பில் "ஆற்றுகை" என்னும் விடயம் ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது அரங்க ஆற்றுகை எதிர்நோக்கும் இடர்கள் தொடர்பாகவும் இந்தக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

ஜோன்சன் ராஜ்குமாரால் எழுதப்பட்டுள்ள "யாழப பாண கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு" எனும் தொடர் கட்டுரையின், 5 ஆம் பாகம் இந்த நூலிலே வெளிவந்துள்ளது. இதனை வாசிக்கும்போது, வெளிவந்த, வெளிரப்போகும் நாளைய பாகங்களையும் படிக்கவேண்டும் எனும் ஆவல் மேலிடுவதாக உள்ளது. கத்தோலிக்க கூத்தினுடைய படிமுறை வளர்ச்சியையும், மாற்றங்களையும் கட்டுரை ஆசிரியர் தெளிவாக்கியுள்ளார்.

"காவலூரின் அரங்கியல் தளத்தில் செயற்பட்ட சில அனுபவக்குறிப்புக்கள்" என்னும் தலைப்பிலே வளநாடன் எழுதியுள்ள அனுபவப்பகிர்வு - ஊர்காவற்துறை மண்ணின் கூத்துக்கலை மரபைத் தெளிவுபடுத்துகிறது.

"கூத்து அமைப்பும் அழகியலும் அதன் அரசியலும்" எனும் விடயம் பற்றிய ஜெயசங்கரின் கட்டுரை வரவேற்கத்தக்கதாக உள்ளது. கள அனுபவங்களை மையமாகக் கொண்டு, இவ்வாக்கம் அமைக்கப்பட்டுள்ளமையே அதற்குக்காரணம். கந்தையா சிறிகந்தவேள் "ஈழத்தமிழ் அரங்க வரலாற்றில் பேராசிரியர் ப.கணபதிப்பிள்ளை ஒரு நோக்கு" என்னும் தலைப்பிலே, தனது படைப்பை அமைத்துள்ளார். அதிலே பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றியும் பல விடயங்கள் பரவிக்கிடக்கின்றன.

இறுதியாக, "நாட்டுக்கூத்தின் எதிர்காலமும் தேசிய அரங்கை நோக்கிய தேடலும்" எனும் தலைப்பில் ஜோன்சன் ராஜ்குமார் தொகுத்தளித்த விடயம் உள்ளது. இதிலே பேராசிரியர் வித்தியானந்தன், குழந்தை ம.சண்முகலிங்கம், விரிவுரையாளர் அருந்தாகரன், தாசீசியஸ், மரியசேவியர் அடிகள் ஆகியோருடைய கருத்துப்பகிர்வுகள் இடம்பெற்றுள்ளன.

பண்டையகால அரங்கு ஒன்றினதும், பாத்திரம் ஒன்றினதும் தோற்றத்தை அட்டைப் படமாகக்கொண்டு வெளிவந்துள்ள ஆற்றுகை இதழ், 11 கூத்து இலக்கியத துறைக்குப் புதியதொரு பொக்கிஷமாக அமைந்துள்ளது.

இ.சர்வேஸ்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னம்
அடிதழீஇ நிற்கும் உலகு.
-திருக்குறள்.

நமது நோக்கு

பொங்குதமிழுக்கு இன்னல் விளைந்தால்...

வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் விழா தொடர்பான, ஊடகச்செய்திகள் பொறுக்காத மனங்களின் கோபங்களையும், கொதிப்புக்களையும், பொறாமை உணர்வையும் மிகவும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

எந்த ஒரு இனத்துக்கும், அதனதன் மொழி, கலாசார பாரம்பரியம், பண்பாடு, தொடர்பான பெருமைகள் குறித்த கர்வமும், பற்றும், எல்லாவற்றுக்கும் மேலாக - அவற்றை எந்தவகையிலும் இழக்கவோ, விட்டுக்கொடுக்கவோ முடியாத சுயகௌரவ உணர்வும், ஜீவமூலமாக இருக்கும். இது ஒரு தவிர்க்கமுடியாத அவசியமுமாகும்.

பாரம்பரியப் பெருமைகள் யாவும் இனமொன்றின் பண்பாட்டு விழுமியங்களின் அடி தொட்டு உருவானவைகளாகும்.

தமிழாக இருக்கலாம், அல்லது உலகின் வேறெந்த மொழியாகவும் இருக்கலாம். தமிழனாக இருக்கலாம், அல்லது உலகின் வேறெந்த இனத்தவனாகவும் இருக்கலாம். இந்தப் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் யாவும் உணர்வு பூர்வமாகப் பேணப்படும்வரைதான், அவரவர் தனித்துவம் பேணிப்பாதுகாக்கப்படும்.

அயல்சக்தியால் அல்லது அந்நிய சக்திகளால் அடக்கு முறைக்கும், ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகும் ஓர் இனம், ஒடுக்குமுறை அழுத்தங்களுக்கும், உரிமைகள் தொடர்பான அச்சுறுத்தல்களுக்கும், இன அழிப்பு நடவடிக்கைகளின் கொடூரங்களுக்கும் உள்ளாவது யதார்த்தபூர்வமான நிகழ்வேயாகும்.

ஆனாலும், ஆதிக்க அழுத்தங்களுக்கு ஆளாகித் துன்புறும் ஓர் இனம் - தன்மீது திணிக்கப்படும் சகலவிதமான அடக்குமுறைகளையும் ஆதிக்கவாதிகளின் அணுகுமுறையின் வழியிலேயே எதிர்கொண்டு தகர்த்தெறிய வேண்டியநிலை ஏற்படும்போதுதான், அந்த இனம் தனது இனத்தனித்துவத்தை அடையாளப்படுத்த, முனைப்புடன் கிளர்ந்தெழவேண்டிய அவசியம் உருவாகின்றது.

இதனைத்தான், விடுதலைப் போராட்டம் என அடக்கு முறைகளுக்காளானோர் கூறுகின்றனர். பயங்கரவாதம் என அடக்கியாள நினைப்போர் அடையாளப்படுத்துகின்றனர்.

இந்த முரண்நிலையின் உச்சக்கட்டமே ஆயுதப்போராட்டத்துக்கான ஆதாரதளமாகவும் அமைந்துவிடுகின்றது.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தத்துவார்த்த கோட்பாடும், இந்த யதார்த்த தளத்தில் இருந்தே உருவானதாகும்.

'தமிழ்' தான் தமிழ்மக்களின் தனித்துவ அடையாளத்தை உறுதிப்படுத்தி நிற்கும் மூலமந்திரமாகும்.

'தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'... என்ற பாரதிதாசன் பாடலின் ஜீவவரிகள் இதையே உணர்த்தி நிற்கின்றன.

போர்முறையில் பொங்கிஎழுந்த தமிழர்கள், தமது தனித்துவத்தின் ஆத்மாவான, தமிழுக்கு வீழா எடுக்க முனைகின்றார்கள். அதையும்கூட பொங்குதமிழாகவே கொண்டாடி வந்துமுள்ளனர்.

இது ஒன்றும் பயங்கரவாத நடவடிக்கையல்ல... பண்பாட்டு நிகழ்வு மட்டுமே. ஒரு இனம் தனது தாயகத்தை பாதுகாக்க முனைவதும், தாய்மொழியைப் பாராட்டி, புகழ்ந்து, விழா நடத்த முனைவதும் அந்த இனத்தின் வாழ்வியல் உரிமையேயாகும்.

அதனைத் தடுப்பதும், கட்டுப்படுத்த முனைவதும், தலையீடுசெய்து குழப்பமுயல்வதும் - அப்பட்டான மனித உரிமை மீறல் செயற்பாடுகளேயாகும்.

ஒரு தேசத்தின் நலன்காக்க, சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நகர்வுகளுக்கெதிராக, இனவெறியைத் தூண்டும் வகையிலான - பேரணிகளையும், பாதயாத்திரைகளையும் கட்டுப்படுத்தும் வலிமையற்ற - அல்லது அக்கறையற்ற இராணுவமும், ஏனைய சர்வதேச அமைதிப் பிரசாரம் செய்யும் அமைப்புக்களும் பொங்குதமிழ் நிகழ்வை குழப்புவதிலும், அதில் தலையீடுசெய்து - தமிழ்மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை நிராகரிக்க முயல்வதிலும் தீவிரம் காட்டுவதுதான் வேடிக்கையானதும், வேதனையானதுமான நிகழ்வுகளாகும்.

பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளக்கூடாதென-மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் போன்றோருக்கு அச்சுறுத்தல் விடுப்பதும், நிபந்தனைகள் விடுப்பதும் அநாகரிகமான செயற்பாடுகளேயாகும்.

ஒரு இனம் - தான் விரும்பும் கொள்கைகளுக்கேற்ப அந்தக் கொள்கைகளை முன்னெடுக்கும் அமைப்புடன்- அல்லது கட்சியுடன் இணைந்து செயற்படுவதும், அந்த அமைப்பின் அல்லது கட்சியின் கொடியை ஏற்றி வணக்கம் செலுத்தி, கௌரவிக்க நினைப்பதும் பிழையான விடயமல்ல.

அது அவர்களின் அடிப்படை ஜனநாயக உரிமையும்கூட. அதில் தலையீடு செய்வதும், தடுக்க முயல்வதும் மிகமோசமான மனித உரிமைமீறல் செயற்பாடுகளேயாகும்.

அதனை இராணுவம் செய்தாலும், அரசு செய்தாலும், வேறெந்த பொதுஅமைப்பு செய்தாலும் அதனை மனித உரிமைசார் உணர்வுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் - வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினருக்கு நிபந்தனை விதிக்க முயன்றது, அர்த்தமற்ற ஒன்றேயாகும்.

பொங்குதமிழ் நிகழ்வு ஓர் போர்நிறுத்த மீறல் செயற்பாடல்ல என்பதை படையினருக்கும், சிங்கள பேரினவாதிகளுக்கும் விளக்கவேண்டிய பொறுப்பு அவர்களுக்கேயுள்ளது.

அதைப் புரிந்துகொண்டு அவர்கள் செயற்படவேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு.

நாடும் நடப்பும்

சுதந்திரக் கட்சி தலைமையில் அரச எதிர்ப்பு போராட்டங்கள்!

ஜே.வி.பியுடனான கூட்டணி அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர், சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தலைமைதாங்கிச் செயற்படத் தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதன்படி, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மேலும் புத்துயிர் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக நாடளாவிய தீவிர பிரச்சாரத்தை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சார நடவடிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவரும் இதில் பங்கேற்கவிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நாடளாவிய ரீதியிலான மறியற் போராட்டங்கள் உள்ளிட்ட எதிர்ப்புப் பேரணிகளையும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும், இந்த எதிர்ப்புப் போராட்டங்களை - பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகளின் ஆதரவாளர்கள் மட்டுமே நடத்துவதென முடிவுசெய்திருப்பதாகவும், எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் - கண்டியில் எதிர்வரும் 19 ஆம் திகதியும், திசமகராமவிலிருந்து கதிர்காமத்துக்கான பாதயாத்திரை எதிர்வரும் 28 ஆம் திகதியும், எம்பிலிப்பிட்டியவில் அடுத்தமாதம் 4 ஆம்திகதியும், பொலநறுவவில் அடுத்த மாதம் 9 ஆம் திகதியும், நீர்கொழும்பில் ஒக்டோபர் 11 ஆம் திகதியும், களுத்துறை, நுவரேலிய மாவட்டங்களில் அடுத்த மாதம் 12 ஆம் திகதியும், காலியில் அடுத்தமாதம் 13 ஆம் திகதியும், ஆனைமடுவவில் அடுத்தமாதம் 17 ஆம் திகதியும், பதுளையில் அடுத்த மாதம் 18 ஆம் திகதியும், மாத்தறையில் ஒக்டோபர் 19 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் அரசாங்கத்தின் செயலற்ற தன்மை, பொருட்களின் விலை உயர்வு, கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல், விலைவாசி உயர்வு, வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமை போன்ற பிரச்சினைகளை முக்கியத்துவப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அரசை இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண்பதற்கு நிர்ப்பந்திப்பதே எமது நோக்கம். அரசாங்கத்தால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாவிட்டால், ஆட்சியை விட்டு வெளியேறட்டும். பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் என்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய எழுச்சிக் காரியாலயம் நெல்லியடியில் திறந்துவைப்பு!

வடமராட்சி கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் பணிமனைத் திறப்புவிழா, நேற்று மு.ப 10 மணிக்கு, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் இடம்பெற்றது.

பொதுச்சுடர் நிகழ்வின் பின், தேசியக் கொடியை - வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து எழுச்சிப் பேரவைப் பணிமனையின் பெயர்பலகை திரைநீக்கமும், நாடாவை வெட்டி, பணிமனைத் திறப்புவிழாவும் இடம்பெற்றது.

ஆசியுரையை - செ.சேதுராசா (அதிபர் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) வழங்கினார். அவர் தனது உரையில் - வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வைபவத்தில், நாம் இன்று கலந்திருக்கிறோம். இது மக்களின் தேவைக்காகப் போராடி, முன்னேறிக்கொண்டிருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் எடுக்கும் சரியான நடவடிக்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

விடுதலைப் புலிகள் இழப்புகளின் மத்தியில், மக்களுக்காகச் சரியான வழியில் செல்லும் தேசிய எழுச்சிப் பேரவையினை அமைத்துள்ளனர்.

மன அழுத்தங்களைக் கொண்டுள்ள மக்களோடு இணைந்து, அரசியல் ரீதியில் மக்களது தேவைகளை அறிந்து, மக்கள் அனைவரையும் அனைத்துச் சேவைகளைத் தொடர வாழ்த்துகிறேன் என்று கூறினார். (116)

சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்திய இராணுவச் சிப்பாய்க்கு விளக்கமறியல்!

(மட்டக்களப்பு)

பதின்மூன்று வயதான சிறுமி ஒருவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய இராணுவச் சிப்பாய் ஒருவரை இந்த மாதம் இருபத்தாறாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க மட்டக் களப்பு மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்தியதாக குற்றம் சாட்டி மேற்படி இராணுவச்சிப்பாயை பொலிஸார் கடந்த மாதம் 29 ஆம் திகதி கைதுசெய்திருந்தனர். இவரைக் கடந்த 12 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையை கடந்தவெள்ளிக்கிழமை மேற்படி சிப்பாய் பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, அவருக்கு 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும், துன்புறுத்தப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தும்படியும், நீதிவான் ஏ.எம்.எம். அமீர் உத்தரவிட்டார்.

சட்டவிரோத செயல்களை தடுக்க

இலங்கை-பாகிஸ்தான் நாடுகள் கூட்டாக இணைந்து செயற்படும்!

(இஸ்லாமாபாத்)

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை, சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்குக் கடத்துதல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் என்பனவற்றுக்கு எதிராக இணைந்து செயற்படுவதற்கு பாகிஸ்தானும் இலங்கையும் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக உடன் நடவடிக்கை நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் தலைநகரம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள உள்த்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவும் பாகிஸ்தான் அமைச்சர் பைசல் ஹயற்றும் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந் உடன்படிக்கை மூலம் தீவிரவாத நடவடிக்கை மற்றும் மனித, போதைப்பொருள் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைத்தல், புலனாய்வ தகவல்களை பகிர்ந்துகொள்ளவும் வழிசெய்துள்ளது. இரண்டு நாள் விஜயமாக பாகிஸ்தான் சென்றுள்ள ஜோன் அமரதுங்க - பாகிஸ்தான் அமைச்சர் சுர்ஷிட் முகமட் கௌதிரியையும் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அதிகார போட்டிக்குள் அரசாங்கம் பொருளாதார சிக்கலுக்குள் நாடு

"கூலியாணம் கட்டினால் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால்தான் கலியாணம்."

இப்படித் தமிழ்நாட்டில் ஒரு பழமொழி இருக்கிறது. இதுபோல்தான்-

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால்தான், ரோக்கியோ மாநாட்டில் உதவிவழங்கும் நாடுகள் உறுதியளித்த நிதி உதவிகளை வழங்க முடியுமென்று,

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி கூறுகிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான - சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்குவது பற்றிப் பேசுவதற்குமுன் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் மக்கள் மீளக்குடியேறவும், இயல்பு வாழ்க்கையைத் தொடங்கவும், முதலில் அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகசபையை நிறுவவேண்டும் என்று, விடுதலைப் புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

இடைக்கால நிர்வாகசபையில் காணி, காவற்துறை ஆகிய இரு பிரதான அம்சங்கள் இடம்பெற வேண்டுமென்று, அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேசமயம், இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்கக்கூடாதென்று ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது பொது ஜன ஐக்கிய முன்னணியாகிய எதிர்க்கட்சியும், இவற்றுடன் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியும், முழுமூச்சாக எதிர்த்துக் கொண்டிருக்கின்றன.

இதேசமயம், இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களுக்கும் இடமளிக்கவேண்டுமென்றும், தங்களுக்கு சமமான இடம் கொடுக்கப்படவேண்டும் என்றும் - இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களும் வற்புறுத்தி வருகின்றன.

விடுலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை வழங்கக்கூடாதென்று- ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணியும்), ஈரோஸ் என்ற நால்வர் அணியும், சந்திரிகா முதல் இங்குவரும் வெளிநாட்டுச் சமாதானத் தூதுவர்கள் வரை சென்று சந்தித்துக் கோரிக்கைவிடுத்து வருகின்றனர்.

இந்தச் சமயத்தில் திருகோணமலைத் துறைமுகத்திற்கும், திருகோணமலைக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகப் பொது ஜன ஐக்கிய முன்னணியும், அதன் தலைவர்களும், எச்சரிக்கை செய்துவருகின்றனர். இதுபற்றி விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தை உடன் கூட்டவேண்டுமென்றும், அவர்கள் கோரிக்கை விடுத்தனர். திருகோணமலைத் துறைமுகத்தைச்சூழ விடுதலைப் புலிகள் முகாம்கள் அமைத்துத் தாக்குதலுக்குத் தயாராகி இருப்பதாகவும், எதிர்க்கட்சியினர் கூச்சலிடுகின்றனர்.

திருகோணமலைக்கு எவ்வித அச்சுறுத்தலுமில்லை. புதிய முகாம்களை புலிகள் அமைக்கவும் இல்லையென்று அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மறுப்புத் தெரிவித்தார்.

ஆனாலும், உண்மையை அரசு மறைக்கின்றதென்றும், விடுதலைப் புலிகள் திருகோணமலையைத் தாக்குவதன் மூலம் கடற்படைக்கும்,

பலாலி விமானத்தளத்துக்குமான விநியோகத்தைத் தடுப்பதற்கு வியூகம் வகுத்துள்ளதென்று எதிர்க்கட்சியும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரும் எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளால் திருகோணமலைக்கு ஏற்படும் ஆபத்து, இந்தியாவின் பாதுகாப்புக்கே பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும், க்திர்காமர் - டில்லிக்கே போய் இந்திய அரசை எச்சரிக்கை செய்துவந்தார்.

இதேசமயம், திருகோணமலைத் துறைமுகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் தீவிர கவனஞ்செலுத்திய பின்னர் நாட்டினதும், முப்படைகளினதும் தலைவி என்ற அடிப்படையில், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எந்தநேரமும் திடீர் தீர்மானமொன்றை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்கொள்ளலாமென, பொது ஜன ஐக்கிய முன்னணி எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பது - சாவதேச அழுத்தமென்றுவரும் பட்சத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையே பதவிவிலக்கக்கூட ஜனாதிபதி தயங்கமாட்டாரென்று, பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவுறுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் - திருகோணமலையைத் தாக்குவதற்கும், படைகளின் விநியோகப் பாதைகளைத் தடுப்பதற்கும் வியூகம் வகுத்துச் செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டிவரும் அதேவேளை, கொழும்பு ஊடகங்கள் அதிலும் குறிப்பாக - சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் - கிழக்கில் முஸ்லிம் களையும், அவர்களின் வாகனங்களையும், பொருட்களுடன் கடத்திவருவதாகவும், கொலை செய்துவருவதாகவும் செய்திகளை வளியிட்டு வருகின்றன. அங்கு நடைபெறும் கொலைகள், கொள்ளைச் சம்பவங்கள் எல்லாவற்றுக்கும் புலிகளே காரணமென்றும் அவை செய்திகளை வெளியிடுகின்றன.

விடுதலைப் புலிகள் புதிய புதிய முகாம்கள் அமைத்துப் போருக்குத் தயார் செய்வதாகவும், இந்த ஊட

கங்கள் செய்திகளையும், செய்திக் கட்டுரைகளையும் வெளியிடுகின்றன.

இதேசமயம், இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த கிழக்குப் பகுதித் தளபதி ஒருவரே - திருகோணமலையில் புலிகள் துறைமுகத்தையும், திருமலையையும் தாக்கும் விதத்தில் புதிய முகாம்களை அமைத்துவருவதாக அறிக்கை தயாரித்து, கதிர்காமரிடம் கொடுத்தாரென்றும், கதிர்காமர் இதைத் தங்களுக்குச் சாதகமான பத்திரிகையாளர்களைத் தமது இல்லத்துக்கு அழைத்து விளக்கம் கொடுத்து அனுப்பிவைத்தாரென்றும், சென்ற வாரம் ஒரு ஆங்கிலவாரப் பத்திரிகை தனது தலையங்கத்தில்கூட எழுதியிருந்தது. கதிர்காமரின் துரோகச் செயலையும் கண்டித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் புதிய முகாம்கள் அமைத்து வியூகம் வகுப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் அதேசமயம், அரசாங்கம் வெளிநாடுகளில் நவீன ஆயுதங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்துவருகிறது. இத்தாலியிலிருந்தும் நவீன சாதனங்கள் வாங்குவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது. படையினருக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து படைத்தளபதிகள் குழுவொன்று வந்து, இலங்கைப் படைத்தளபதிகளுடன் ஆலோசனை நடத்தியது. அமைச்சர்கள் சிலர் ஆயுதம் வாங்குவதற்காக வெளிநாடுகளுடன் பேரம்பேசி வருகின்றனர்.

வடக்கிலும்-கிழக்கிலும் இராணுவமும், கடற்படையும் புதிய புதிய முகாம்களை அமைத்து வருகின்றன. சோதனைச்சாவடிகள் புதிது புதிதாக முளைக்கின்றன. இராணுவ வாகனங்கள், கவச வாகனங்கள் ரோந்து சுற்றி வருகின்றன. யாழ்ப்பாணத்தில் கவச வாகனம் நசித்து ஒருவர் பலியாகியிருக்கிறார்.

படையினரின் நடவடிக்கைகளே போருக்குத் தயார் செய்வதாகக் காட்சி தருகின்றன.

இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் சந்திரிகாவும், பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. மற்றும் நால்வர் அணியென்பனவும் சேர்ந்து குழப்பி, மீண்டும் ஒரு மோதலுக்கு வழிவகுத்துவிட்டால் என்ன நடக்கும்.

இடைக்கால நிர்வாகசபை அமைக்காமல், ரணில் அரசைக் கலைத்து, ஜனாதிபதி தமது பொறுப்பில் அரசை எடுத்தாலோ, மாற்று அரசு ஒன்றை அமைத்தாலோ அடுத்து என்ன செய்வார்கள்.

போர் தொடங்கினால், இலங்கை அரசபடை பலம் வாய்ந்ததாக இல்லையென்பதும், இது விடுதலைப் புலிகளுடன் தாக்குப்பிடிக்க முடியாதிருக்குமென்றும், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இதையே இலங்கையின் முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்ஷித் வேறுவார்த்தைகளில் சொன்னார்.

இவைகளுக்கெல்லாம் இலங்கையின் பொருளாதாரம் இடம் தருமா? இப்பொழுதே இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குப் போய்விட்டது. வெளிநாடுகள் ரோக்கியோவில் உறுதியளித்த கோடிக்கணக்கான நிதி கிடைக்க வேண்டுமென்று, ரணில் அரசும் முயற்சி செய்து வருகின்றது.

எதிர்க்கட்சியினர் தமது குழப்பியடிக்கும் முயற்சியில் வெற்றிபெற்றால், சந்திரிகாவானாலும், அவர் அமைக்கும் மாற்று அரசானாலும் வெளிநாட்டு உதவியைத்தானே நம்பியிருக்கமுடியும்.

வெளிநாடு எதுவானாலும் இங்கே படைகளை அனுப்பி புலிகளை எதிர்க்க முன்வருமா? முடியுமா?. இந்த அரசை நீக்கிவிட்டுப் புலிகளுடன் எந்த அரசு பேசுவது, யார் பேசுவது, எதைப்பற்றிப் பேசுவது. மீண்டும் இடைக்கால நிர்வாகம பற்றியும், புதிய அரசுடன் - புதிய பேச்சுவார்த்தையா, சந்திரிகாவுடனா?

எதிர்க்கட்சிகள் அதிகாரத்திற்காகத்தான் போராடுகிறார்கள். நால்வர் கூட்டணியும், வாலாட்டி நிற்கின்றன. இதற்கெல்லாம் நாடு தாங்குமா? விடுதலைப் புலிகள் எதற்காக போராடுகிறார்கள் என்பது உலகமே அறியும். இடைக்கால நிர்வாக சபைதான் இடர்களைக் களையமுடியும்.

எஸ்.எம்.ஜி.

தாயக விடுதலைக்கு உயிர்கொடுத்த தியாகி திலீபனின் நினைவு நாட்கள்

அன்று திலீபன் அண்ணன் சொன்னவை, இன்று எங்கள் வாசல்வரை வந்துவிட்டன.

காலம் வெகுதொலைவிலில்லை. கண்ணெதிரே தெரிகிறது எம் காலம். மலரப்போகும் எமது தாயகத்தில்- மாவீரர் நினைவுகளைச் சுமந்தபடி, எமது சந்ததி வரலாறு எழுதும். அண்ணன் திலிபன் வாழ்வு அதில் ஒரு அத்தியாயம் ஆகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

"புயலெனப் புலிவீரர் உள்ள போது, மலையெனத் துன்பம் வரினும் கலங்கிவிடோம் நாம்" எனத் தமிழர் எல்லோரும் கைகோர்த்து நிற்கும் காலம் இது. வளமான எதிர் காலம் எமக்காய் இனி விடியக் காத்திருக்கிறது.

சர்வேஸ்

ஈழமண்ணின் விடிவிற்காய், ஆயிரமாயிரம் மாவீரர்கள் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கி உள்ளார்கள். உடலில் வெடிகுண்டைச் சுமந்து, எதிரிமுகாமில் வெடித்துச் சிதறிய கரும்புலிகளும், மார்பினில் குண்டேந்தி, மண்ணை முத்தமிட்ட மறப்புலிகளும், கடலையே தீயால் வேகவைத்த கடற்புலிகளும், எங்கள் மனங்களில் மாளிகை கட்டி வாழ்பவர்கள்.

அத்தனை மாவீரச் செல்வங்களிற்கும் மகுடம் வைத்தாற்போல், காலத்தால் அழியாத காவியநாயகனாய், காலமெல்லாம் வாழ்பவர்தான் தியாகதீபம் லெப்.கேணல் திலீபன். விடுதலைப் புலிகளிற்கு ஆயுதவழியில் மட்டுமல்ல, அகிம்சை வழியிலும் போராடத் தெரியும் என, உலக அரங்கிற்கு எடுத்துகாட்டிய உத்தமன் திலீபன்.

தன் மண்ணையும், மக்களையும், மக்களின் சுதந்திரமான வாழ்வையும் இலக்காக வைத்து, பன்னிருநாள் ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல், வேள்வி வளர்த்தவர் தியாகி திலீபன். அமைதிப்படை என்னும் பெயரோடு எம்மண்ணை ஆக்கிரமித்த இந்திய அரசின் அடாவடித்தனத்திற்கு அடையாளச் சின்னமாகிப் போனார். அகிம்சையையே உலகிற்குப் போதித்த காந்திய தேசத்தின் கபடத்தனம், எம் தாயகத்திலே வெளிப்பட்டது.

பாரத தேசத்தின் பாராமுகம் - எம் பாச உறவைப் பார்விட்டுப் பறக்க செய்தபோது, பாரதத்தின் முகமூடி கிழித்தெறியப்பட்டது. தர்ம சக்கரம் ஒருதரம் தலைகீழாய் சுழன்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு, ஒரு உத்வேகம் பிறந்தது. உயிரையும் விலையாகக் கொடுக்க இளைஞர்கள் அணி அணியாகத் திரண்டனர். அண்ணன் திலீபன் கண்ட கனவுகள் - நனவுகளாக அரங்கேறத்தொடங்கின.

ஒன்றல்ல, இரண்டல்ல ஆயிரமாயிரமாம் உயிர்களை ஆகுதியாக்கி, சத்தியவேள்வியை வளர்த்தோம். வேள்வித் தீ விண்வரை கொழுந்துவிட்டு எரிந்தபோது, வீணர்களால் எதுவுமே செய்யமுடியவில்லை. உலகின் திசை எங்குமே ஓடிப்பார்த்தார்கள். களைத்துப்போக, அவர்கள் கனவுகள் எதுவுமே மெய்ப்படவில்லை.

நல்லூரில் தொடங்கிய சத்திய வேள்வியின் சத்தம், உலகின் எட்டுத்திக்குகளிலும் உள்ள கதவுகளையும் ஒருதடவை தட்டிச்சென்றது. உலகத்தின் பார்வை ஒருதரம் தமிழீழம் மீதும், தமிழ் மக்கள் மீதும் திரும்பியது சிலர் ஆதரித்தார்கள். சிலர் ஆதரிப்பதுபோல் எதிர்த்தார்கள்.

நல்லூரில் வளர்த்த வேள்வியில் திலீபன் கூறிய "மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்" எனறு அவன் கண்ட கனவுகள் கருக்கொள்ளத் தொடங்கியது. கருமுகிலெனத் திரண்ட போர்மேகங்கள் - குண்டு மழைகளை எம்மீது பொழிந்த போதும், ஆயிரமாயிரம் உயிர்களை, உடமைகளை இழந்த போதும் எம்மக்கள் அஞ்சவில்லை. தலைவனின் பின்னே திரண்டு நின்றனர். அவர்கள் முன்னே எத்தனையாயிரம் படைகள் எங்கிருந்து வந்தாலும், தயங்கோம் எனப் புலிப்படை புயலாகி நின்றது. அவர்கள் பின்னே மக்கள் கூட்டம் - "மக்கள் சக்தி மாபெரும் சக்தி" எனத் திரண்டது. விடுதலைப் பயிரை வேரோடு பிடுங்க நினைத்த பலருக்கு, வேதனைதான் மீதமாகிப் போனது.

1987 இல் தொடங்கிய மக்கள் புரட்சி - இன்று பொங்குதமிழ் எனப் பொங்கிப் பிரவாகித்தது. முட்கம்பி வேலிகளிற்குள்ளும், தடைமுகாம்களிற்குள் அடக்கப்பட்டிருந்த எமது மக்கள் சமூகம் அலையெனத திரண்டது. மக்கள் புரட்சி வெடித்தது. மண்டலத்தின் திசை எங்கும் மணம் பரப்பியது. ஈழத்திற்கு அப்பால் பிறதேசங்களிலும் பொங்குதமிழ் பொலிவு பெற்றது. திலீபனின் கனவுகள் நனவாகும் காலங்கள் நெருங்கின.

விடுதலைப் புலிகளின் பலத்தைக் கண்டு, உலகம் வியப்புற்றது. போரின் மூலம் புலிகளை வெல்ல முடியாது என்ற உண்மை, காலம் கடந்து இலங்கை அரசிற்குத் தெரிய வந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

பேச்சுவார்த்தையில் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கியமானவை- அன்று அண்ணன் திலீபன் முன்வைத்தவையே. மீண்டும் பதினைந்து வருடங்களின் பின்பே, தமிழரின் போராட்டம் திரும்பிபார்த்து

ஈராக்கின் பலுஜா நகரில்

அமெரிக்க வாகன அணி மீது தாக்குதல்; தொடர்ந்த சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்தனர்!

(பக்தாத்)

ஈராக்கின் பலுஜா நகரில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில், அமெரிக்கப் படைவீரர், ஜோர்தானியப் படைவீரர், ஈராக்கியப் பொலிஸார் என 12 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை அமெரிக்க வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் உயிரிழந்தார்.

இதையடுத்து,

கண்ணிவெடித்தாக்குதல் நடைபெற்ற பகுதியிலுள்ள காவலரண் ஒன்றில் நின்ற படையினர் திருப்பித் தாக்கியதில், அருகில் அமைந்திருந்த வைத்தியசாலை ஒன்றில் காவல் கடமையிலிருந்த ஜோர்தானியப் படைவீரர் ஒருவர் உயிரிழந்தார்.

அத்துடன் மோதல்களில் சிக்கி எட்டு ஈராக்கியப் பொலிஸாரும் உயிரிழந்தனர்.

இதேவேளை -

தாக்குதல் இடம்பெற்ற பிரதேசம் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் அதிகமுள்ள இடமாகும். இந்தக் குண்டு வெடிப்பு நடைபெறுவதற்கு முன்னர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படையினருடன் கூட்டம் ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தனது ஆழ்ந்த அனுதாபத்தை ஜோர்தானிய அமைச்சரிடம் தெரிவித்தார்.

ஈராக்கில் போரை ஆரம்பிக்கவேண்டாமென இறுதிநேரத்தில்

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பிளேயரிடம் கேட்டிருந்தாராம்!

தகவல் வெளியிடுகிறது அந்நாட்டு ஞாயிறு வாரஇதழ்

ஈராக்கில் போர் ஆரம்பவதற்கான கடைசி நிமிடத்தில், போரை ஆரம்பிக்க வேண்டாம் என்று, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக் ஸ்ரோ, ரொனி பிளேயரிடம் கேட்டிருந்ததாக ஞாயிறு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது

ஈராக்கில் போரை ஆரம்பிப்பது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன்- ரொனி பிளேயர் 2002 ஆம் ஆண்டில் உடன்பாட்டுக்கு வந்ததாக அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிளேயருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களில் ஏற்பட்ட சந்தேகங்களினால், ஈராக்கில் போரை ஆரம்பிப்பதுதான் சரியென்ற நிலைக்கு அவர் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுவீடன் வெளிவிவகார அமைச்சரின் படுகொலை;

விசாரணைக்கு உதவுவதற்கு பிரிட்டிஷ் நிபுணர்கள் தயார்!

சுவீடன் வெளியுறவு அமைச்சர் அனாலீன் பல்பொருள் அங்காடியில் வைத்து கத்திக்குத்துக்கு இலக்கி கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு உதவ பிரிட்டிஷ் தடையவியல் நிபுணர்கள்முன்வந்துள்ளனர்.

கொலையாளியைக் கண்டுபிடிப்பதற்கு ஆதாரமாக இருந்த கத்தியை பரிசோதனை செய்வதற்கு போதிய வசதிகள் சுவீடனில் இல்லாததாலேயே பிரிட்டிஷ் தடவியல் நிபுணர்களின் உதவி கோரப்பட்டிருந்தது.

கடந்த வருடம் இடம்பெற்ற தீர்க்கப்படாத 150,000 கொலைச் சம்பவங்கள், பிரிட்டிஷ் தடையவியலாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரபாத்தை வெளியேற்றுவது தொடர்பான இஸ்ரேலின் கருத்துக்கு, எதிர்ப்புத் தெரிவித்து முகமூடி அணிந்த பலஸ்தீனியர்கள் ஊர்வலம் நடத்துவதைப் படத்தில் காணலாம்.

ஆபிரிக்காவின் மேற்கு மாநிலமான

கஜானா பிஜோஸில் இராணுவப் புரட்சி!

ஆபிரிக்காவின் மேற்கு மாகாணமான கஜனா பிஸோவின் ஆட்சியை- ஜெனரல் வெர்ஸிமோ கொரியா தலைமையிலான இராணுவத்தினர் சதிப்புரட்சி மூலம்எந்தவித வன்முறைகள் இன்றி அமைதியான வழியில் கைப்பற்றியுள்ளனர்.

ஆட்சியைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றை நடத்தப் போவதாக ஜனாதிபதி கும்பா யாலா கடந்த நவம்பர் மாதம் அறிவித்திருந்தார்.

ஆனால், தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து பதவியிலிருந்து காலத்தைக் கடத்திவந்ததுடன், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருந்தமையால்தான் - ஆட்சியை தாம் கைப்பற்றியதாக இராணுவ அதிகாரி வெர்ஸிமோ கொரியா தெரிவித்தார்.

இதேவேளை, கஜனா - பிஸோவில் தேர்தலை உடனடியாக நடத்துமாறு இராணுவ ஆட்சியாளர்களிடம் போர்த்துக்கல் கோரியுள்ளது.

கஜனா- பிஸோ முன்னர் போத்துக்கல்லின் காலனித்துவத்தின் கீழ் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரபாத்தை பதவி அகற்றுவது தொடர்பான

இஸ்ரேலிய பதில் பிரதமரின் கருத்து சர்வதேச நாடுகளால் நிராகரிப்பு!

பலஸ்தீனியத் தலைவர் யசீர் அரபாத்தை எவ்வாறு பதவியிலிருந்து அகற்றுவது என்பது தொடர்பான கருத்தை இஸ்ரேலியப் உதவிப் பிரதமந்திரி எகுட் ஒல்மோட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டை விட்டு அவரை வெளியேற்றுவது அல்லது கொலை செய்வது போன்ற கருத்துக்களையே அவர் தெரிவித்துள்ளார்.

இவரின் கருத்துக்களை சர்வதேச நாடுகளும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையும் நிராகரித்துள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் - தங்கள் வீடு வாசல்கள், தோட்டம் துரவுகளைப் பார்ப்பதற்காக வருவதற்கு முன்னர் வியாபாரத்தில் கண்ணாயிருப்பவர்களே யாழ்ப்பாணம் வந்து செல்ல முண்டியடித்தனர். இன்றும் வந்து போய்க் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இன்று கிடைக்கமுடியாத பழைய கால அரும்பொருட்கள் பல அற்பப் பொருட்களுக்கு ஈடாகவும் அற்பப்பணத்துக்காகவும் கைமாறப்பட்டன. நல்ல வேளையாக இதைப் பண் பாட்டுத்துறையினர் கண்டுபிடித்து எச்சரிக்கை செய்ததால், கொஞ்சம் தப்பிப்பிழைத்துவிட்டது!

நல்லூர்த் திருவிழாவுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் தென்னிலங்கையிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். முருகனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தியவர்களும் பலருண்டு. நல்லூர்த்திருவிழாவுடன் பெற்றோரையும், உற்றாரையும் பார்ப்பதற்கும் பலர் வந்தனர். வீடு வாசல்களை மட்டுமல்ல, போரால் அழிந்த தங்கள் நகரையும் பார்த்துச் செல்லப் பலர் வந்தனர். போரில் மாண்டு போன தங்கள் உறவுகளின் குடும்பங்களைப் பார்த்து அனுதாபம் தெரிவிக்கவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி வந்தவர்களும் உண்டு.

என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர் ஒருவர் இப்பொழுது வெளிநாட்டிலிருக்கிறார். அவரது குடும் பத்தினர் அனைவருமே வெளிநாடுகளில்தான் என்று அறிந்திருக்கிறேன். நல்லூர்த் திருவிழாவில், ஒருநாள் அவரது ஒரு மகனைச் சந்தித்தேன். பொதுவாக யாழ்ப்பாணத்தவர் கேட்கும் எப்போ வந்தனீர்? எப்போது போகப் போகிறீர், தனியாகவா, வேறுயாருடன் என்ற கேள்விகள் முடிந்தபின் - அவன் "எங்கடை வீராங் கணையைப் பார்க்க வந்தனான்" என்று சொன்னான்.

எனக்கு ஆச்சரியம்! அவர்கள் குடும்பத்தில் நெருக்கமான உறவினர் யாரும் இங்கு இல்லை. எந்த வீராங்கனையைப் பற்றிச் சொல்கிறான். நான் அவனை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தேன்!

இங்கிருந்து வந்த வீடியோப்படம் ஒன்றை பிரான்ஸில் நாங்கள் எல்லோரும் பார்க்கக் கிடைத்தது. அதில், 'மாலதியின்' நிகழ்வுகளும் அடங்கியிருந்தது. அதில் ஒன்றில் மூத்த தங்கச்சியும் ஒரு அணிக்குத் தலைமைதாங்கி அணிவகுத்துச் செல்கிறாள்.

அந்தப் படைகளின் அணிவகுப்பும், அவற்றின் வேகமும் அவர்களிடம் தோன்றும் வீரமும் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. அவளைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அதுதான், நான் நல்லூர் திருவிழாவைச் சாட்டாக வைத்துப்புறப்பட்டு வந்தேன் என்று சொன்னான்.

தாங்கள் வெளிநாட்டுக்குப் புறப்பட்ட பொழுது இந்தத்தங்கை தங்களுடன் வரமுடியாது என்று சொல்லி விடுதலைக்குப் போராடப்போய் விட்டாளாம். என்ன சொல்லியும் அவளின் மனதைமாற்ற முடியாமல் போய்விட்டதாம்.

நல்லூர்த் திருவிழாவுக்குப் பலர், பல நோக்கங்களுடனும் வந்தனர். சுவாமியையும் தரிசித்தனர்.

இவர்களுடன் இன்னொரு கூட்டமும் வந்தது. அது திருடுவதற்கென்றே திட்டமிட்டு வந்த கூட்டம். அவர்களையும் கந்தன் கைவிடவில்லை. சிலரைக் கந்தனே காட்டிக்கொடுத்தும் விட்டான்.

நல்லூர்த்திருவிழாவுடன் வந்தார்களோ அல்லது அதன்பின் வந்தார்களோ, கொழும்பு நாகரிகமுறையில் பிச்சை எடுக்கும் கோஷ்டிகளும் யாழ்ப்பாணத்துக்குப் படை எடுத்திருக்கின்றன.

கௌரவமாக உடையணிந்து பஸ்ஸில் இவர்கள் ஏறியதும் அவசரமாக ஆசனங்களில் அமர்ந்திருக்கும் பிரயாணிகளிடம் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்திருக்கிறார்கள். இப்பிரசுரத்தில் தங்கள் குடும்ப நிலைமை, அக்குடும்பத்தைக் காப்பாற்றத் தமக்கு வேறுவழியில்லாததால், உதவி கேட்பதாக அச்சிடப்பட்டிருக்கும். பின்வாசலால் ஏறி முன்வாசல் வரை இவற்றை விநியோகித்துவிட்டு, மீண்டும் பின் வாசலிலிருந்து பிரசுரங்களை மீளப்பெறும் பொழுது பணத்துக்காகக் கைநீட்டுகிறார்கள். மக்களும் பணம் கொடுக்கிறார்கள். உடல் ஊனமுற்றோருக்கு ஒரு ரூபாய் கொடுக்க விரும்பாதவர்கள் இந்த 'டிப்டொப்' பேர்வழிகளுக்கு நோட்டுகளாக நீட்டுகின்றனர்.

"நன்றாக உழைத்துச் சாப்பிடக்கூடிய, ஒரு குறையும் இல்லாதவர்களுக்கு எங்கட சனம் தாராளமாகக் கொடுக்கிறது. இது அநியாயம்"என்று ஒரு இளமங்கை கவலையுடன் சொன்னாள்.

யாழ்ப்பாணத்தில் - பருத்தித்துறை, பலாலி வீதி பஸ்களில்தான் இந்தக் கௌரவப் பிச்சைக்காரர்கள் தொழில் செய்கிறார்கள்.

"அவர்கள் உண்மையில் பிச்சைக்காரர்கள் தானா?" என்று ஓர் இளம் பையன் சந்தேகம் எழுப்பினான்!

"பாத்திரமறிந்து பிச்சையிடு" என்று ஔவைப் பாட்டி சொன்னதை நினைவூட்டுவது பொருத்தமென்று நினைக்கிறேன்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

நாற்சந்தி

இம்முறையும் படையினருக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள், எதிர்பார்த்த இலக்கை அடையவில்லையாம். படையில் இருந்து தப்பியோடுவோர் பலர், கொண்டுசென்ற ஆயுதங்களுடன் - பாதாள உலகத்துடன் இணைந்துகொண்டு, சமூக விரோத செயற்பாடுகளில் தீவிரமாக இயங்குவதாகவும், தென்பகுதியில் குற்றச்செயல்களின் அதிகரிப்புக்கு இவர்களே காரணம் என்றும், பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் புலம்புகின்ற அளவுக்கு நிலை மோசமாகியுள்ளது.

சம்பள அதிகரிப்பு, சலுகைகள் அதிகரிப்பு, வசதிகள் அதிகரிப்பு என படைத்தரப்புக்கு ஆட்களைக் கவரப் பல உத்திகளைக் கையாண்டபோதும், 'ஆட்சேர்ப்பு' போதுமானதாக அமையவில்லை. என்ன காரணம்?

போரின் எதிரொலி ஏற்படுத்திய அச்சமாக இருக்குமோ? போற போக்கைப் பார்த்தால், பாதாள உலகத்துடன் போராட ஒரு பெரிய படையணி தேவைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

படைத்தரப்பு ஆட்சேர்ப்பு பாதாள உலகத்தவருக்கு பயிற்சியளிப்பதாகவே முடியும் போலுள்ளது.

சங்கக்கடை மனேஜர் சொன்னார் -

"படைக்கு ஆட்சேர்ப்பு என்று வீளம்பரம் செய்வதை விட பாதாள உலகத்தவருக்கு ஆட்சேர்ப்பு என்று செய்தால் அதிகம் பேர் வரக்கூடும்...!"

- தெருவாசி

பகுதிநேர அடிப்படையில் பணியாற்றும் ஆங்கில ஆசிரியர்களின் விபரங்களை மாகாணக் கல்வி அமைச்சு சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில், ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களின் விபரங்களை மாகாணக் கல்வி அமைச்சு சேகரித்து வருவதாக, அமைச்சின் செயலாளர் ஆ.தியாகலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், 24 வலயங்களிலும் கடமையாற்றுகின்ற, சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களினதும் விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு, அவர் சகல வலயக் கல்விப்பணிப் பாளர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் அண்மையில் மேற்கொண்ட போராட்டத்தையடுத்து, இந்த ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று, அடுத்த வாரம் பிரதமர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் - பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் விபரங்கள் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதால், உடனடியாக இந்த விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் 'டி' மற்றும் 'சி' தரத்தில் சித்தியடைந்தவர்களின் விபரங்கள், தனித்தனியாக சேகரிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைவரின் பரிசீலனையிலுள்ள...

நிலைப்பாடுகள் பற்றி நாங்கள் தெளிவாக விளக்கியிருக்கிறோம். குறிப்பாக, ஜப்பானில் நடைபெற்ற மாநாட்டில் நாங்கள் கலந்துகொள்ளாமல் இருந்ததற்குரிய காரணங்களைத் தெளிவுபடுத்தினோம்.

அதைத்தொடர்ந்து, கொழும்பில் நடைபெற்ற மாநாட்டிலும் நாங்கள் கலந்து கொள்ளாததற்குரிய காரணத்தையும் அவருக்கு விளக்கிக் கூறினோம்.

சர்வதேச சமூகம் பெருமளவு பொருள் உவிகளைச் செய்ய முன்வந்திருப்பதையிட்டு, நாங்கள் மகிழ்வடைந்திருந்தாலும், அது எங்களுடைய தமிழர் தாயகப் பிரதேசத்துக்கும் தமிழ்மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய வகையில், சரியான முறையில் வந்துசேரும் என்ற உறுதிப்பாடு இல்லாத ஒரு குழப்பமான சூழ்நிலை இருக்கிறது.

வடக்கு - கிழக்கிலே நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி தமிழர் தாயகப் பிரதேசத்தில் - ஒரு முறையான அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பை நிறுவிக்கொண்டால்தான், எதிர்காலத்தில் சர்வதேச சமூகம் செய்யும் உதவிகள் - சரியான முறையில், தமிழ் பேசும் மக்களுக்குச் சென்றடையும்.

ஏற்கனவே, ஆறு சுற்றுப் பேச்சுக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவும் அமுல்படுத்தப்படவில்லை. அதனால், நமது மக்கள் நம்பிக்கை யீனம் அடைந்திருக்கின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறமுடியாமல் ஏக்கத்தோடும் விரக்தியோடும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டாலும், தமிழ்மக்கள் சுதந்திரமாக நடமாடி, தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்குரிய நிலை இன்னும் ஏற்படவில்லை. இனிவரும் காலங்களிலாவது, நம்பிக்கையான சூழலை ஏற்படுத்த வேண்டுமானால், இந்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி, மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் நீங்கி இயல்புநிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகப் பிரதேசத்தை உள்ளடக்கிய ஒரு இடைக்கால நிர்வாக கட்டமைப்பை நிறுவிக்கொள்ளவேண்டும். இதுவே எதிர்காலத்தில் அமைதி முயற்சிகளையும், சமாதான முன்னெடுப்புக்களையும் நாங்கள் உறுதியோடு முன்னெடுத்துச் செல்ல வழிகோலும் என்பதை மிகவும் தெளிவாக அகாஷியிடம் விளக்கியிருக்கிறோம்.

ஜப்பான் விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷியின் எதிர்பார்ப்புக்கள் - சர்வதேச நாடுகளின் எதிர்பார்ப்புக்களாகவே இருப்பதை அவருடனான பேச்சுக்களிலிருந்து அறியமுடிந்தது.

அதாவது மீண்டும் பேச்சுக்கள் தொடரப்படவேண்டும் என்பதும், தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்பதிலும் அவர் இன்று நடைபெற்ற பேச்சுக்களில் ஆர்வங்காட்டினார். அவருடைய ஆர்வத்தையும், விருப்பத்தையும் நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை, தமிழர் தாயகப் பிரதேசத்தின் இன்றைய யாதார்த்த நிலை தொடர்பாக நாங்கள் அவருக்கு எடுத்துவிளக்கியுள்ளோம்.

தமிழர் தாயகத்தில் இயல்பு வாழ்க்கையையும், நம்பகத்தன்மையையும் நாங்கள் கட்டியெழுப்புவதற்கு - ஒரு முறையான இடைக்கால நிர்வாக அலகை நிறுவி, அந்தக் கட்டமைப்பின் ஊடாகவே சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றமுடியும் என்பதை நாங்கள் அவருக்குத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளோம்.

அத்துடன், நாங்கள் அமைத்த உபகுழுக்கள் தோல்வி அடைந்தமைக்கான காரணங்களையும் எடுத்து விளக்கினோம்.

உபகுழுக்கள்- அவசரமான மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு பணிகாக உருவாக்கப்பட்டதால் நாம் அதனை ஏற்றுக்கொண்டோம்.

ஆனால், ஆறு மாதங்கள் கடந்தும் அது செயற்பட முடியாமல் முடக்கமடைந்தமைக்கான காரணத்தையும் அவரிடம் தெரிவித்தோம்.

ஆகவே - ஜப்பானினதும், சர்வதேச சமூகத்தினதும் விருப்பங்களை நாங்கள் புரிந்துகொண்டாலும், எங்களுடைய மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய நடைமுறைச் சாத்தியமான எந்த விடயங்களும் ஏற்படாமல் - நாங்கள் தீர்மானங்களையும், வாக்குறுதிகளையும் நம்பிக்கொண்டு போகமுடியாது.

இந்த விடயங்கள் தொடர்பாக தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வதாக, யசுசி அகாஷி தெரிவித்தார்.

குரங்குப்பாஞ்சான் முகாம் நாங்கள் காலங்காலமாக இருந்த முகாம். இதனை வெறுமனே செய்திக் கவர்ச்சிக்காகப் பயன்படுத்துவது தவறு. இது எமக்கு மிகுந்த மனவேதனையைத் தருகிறது.

இந்த முகாம் தொடர்பாக - கண்காணிப்புக்குழுவுக்கும், நோர்வேத் தரப்பிற்கும் உரிய ஆதாரங்களுடன் விளக்குவதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றோம்.

ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகள் கூறுவது போன்று, நாங்கள் புதிய முகாம்களை அமைக்கவில்லை. அப்படி அமைக்கவேண்டிய தேவையும் எமக்கில்லை. ஏற்கனவே இருந்த முகாம்களையே - மக்கள் மீளக்குடியமர்ந்த பொழுது வேறு இடங்களுக்கு மாற்றியுள்ளோம்.

சமாதான முயற்சிகளை குழப்புவதற்காக நாங்கள் புதிய முகாம்களை அமைப்பதாக - தென்னிலங்கையிலுள்ள இனவாதக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் தெரிவித்துவருகின்றன. இவ்வாறு வழமைக்கு மாறான, உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களை செய்துவருகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - தமிழீழத் தேசியக் கொடியேற்றுகின்றமையே இப்போது சர்ச்சைகளை ஏற்படுத்துகின்றது. இதனை ஏன் பெரிய பிரச்சினையாக எடுக்கின்றார்கள் என்பது எமக்கு விளங்கவில்லை. காலங்காலமாகத் தமிழர் தமது கொடியை ஏற்றுவது வழமை. இது புதிதாக உருவானது அல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களும் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றுவது வழமையானது.

வட அயர்லாந்தில் சமாதான மாநாடு ஒன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் நாங்கள் கலந்துகொள்வது குறித்தும், யார் யார் கலந்துகொள்வது என்பது பற்றியும் இன்னமும் தலைமைப்பீடம் முடிவெடுக்கவில்லை. முடிவு எடுத்த பின்னர், அது பற்றித் தெரிவிப்போம்.

வடக்கு கிழக்கில் தமிழர் தாயகப் பிரதேசத்தை உள்ளடக்கிய ஒரு இடைக்கால நிர்வாக அலகு அவசியமானது.

சர்வதேச நாடுகள் வழங்குகின்ற உதவிகள் மக்களைச் சென்றடையக்கூடிய வகையில் - சரியான உறுதியான கட்டமைப்பு எதுவும் தற்போது இல்லை. இதனால் அந்த உதவிகளை நடைமுறைப்படுத்த முடியாது.

இதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழர் தாயகப் பிரதேசத்திற்கு இடைக்கால. ஏற்பாடாக - ஓர் அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுள்ளது.

இவ்வாறான கட்டடைப்பு உருவாக்கப்பட்ட பின்னர்தான், சமாதான நடவடிக்கைகள் குறித்து மக்கள் நம்பிக்கை கொள்வார்கள். அத்துடன், சமாதான நடவடிக்கைகளையும் உறுதியோடு முன்னெடுக்கமுடியும். கிழக்கு மாகாணத்தில் புதிய பொலிஸ் பிரிவு ஏற்படுத்துவது எரியும் நெருப்புக்குள் எண்ணெய் ஊற்றுவது போன்றது. இவ்வாறான பொலிஸ் படை தேவையற்றது.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உடல்நிலை பாதிப்படைந்துள்ளதால், எமது சமாதான பேச்சுக்களில் அவர் பங்குகொள்ள முடியாதிருக்கின்றது.

எமது தலைமைப்பீடம் தேவையேறபடும்பொழுது, அவருடைய ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பெற்றுக்கொள்கின்றது. அன்ரன் பாலசிங்கம் பேச்சுக்களிலிருந்து விலகிக்கொள்ளவில்லை.

தென்னிலங்கை ஊடகங்களுக்கு லக்ஷ்மன் கதிர்காமர் எமது அமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகப் பிரச்சாரம் செய்து வருகின்றார்.

எமது அமைப்பு - ஓர் குடும்பம் போன்று செயற்பட்டு வருகின்றது. எமக்குள் பிளவுகளும், வேறுபாடுகளும் ஏற்படமாட்டாது. அதனை எமது மக்கள் நம்பவும் மாட்டார்கள். இவ்வாறு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தென்மராட்சி தென்னந்தோட்டங்களை பார்வையிடுவதற்கு படையினர் அனுமதி

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியிலுள்ள, அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள, தென்னந்தோட்டங்களைப் பார்வையிட உரிமையாளர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை - தெங்கு பயிர்செய்கை சபை அதிகாரிகளும், வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கமும் இணைந்து ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன.

கிளாலி, முகமாலைப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களை, எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையும், எழுதுமட்டுவாள், கரம்பகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை பார்வையிடுவதற்கும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்தப் பகுதிகளிலுள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்கள் - தெங்கு பயிர் செய்கை அலுவலர்களுடன் தொடர்புகொள்ளுமாறு, வடமாகாண தெங்குசெய்கையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் படைத் தளபதி கொழும்புக்கு நேற்று விஜயம்!

(கொழும்பு)

பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் தளபதி தலைமையில், ஆயுதப் படைகளைச் சேர்ந்த 5 உயரதிகாரிகள் நேற்று கொழும்பு வந்துள்ளனர்.

கராச்சியில் இருந்து புறப்பட்ட இந்தக் குழுவினர் - நேற்று பிற்பகல் 3.40 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் கூட்டுப்படைத் தளபதி மொகமட் ஏ ஷியா தலைமையில் வந்த குழுவினர் - முப்படைத் தளபதிகளைச் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தியாகதீபம்...

ரீதியாக உண்ணாவிரதத்துடன் நடைபெறும்.

இதேவேளை -

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபன் நினைவுத் தூபியில் விசேட நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மலரஞ்சலி செலுத்துதல் நடைபெறும். (72,68,34,ரா)

வெல்கிசன் குழுவினர்...

அரசின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ள இவர்கள், இந்தப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

வன்னி செல்லும் இவர்கள்- அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து, வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக புலிகளின் நிலைப் பாட்டை கேட்டறிந்து கொள்வர்.

அத்துடன், திருகோணமலையிலுள்ள குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நோர்வே அரசிற்கு எழுதியுள்ள கடிதம் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவர்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான அக்னஸ் பிரகடோர்யர் - புலிகளின் வான்-எல முகாம் சம்பந்தமாக ஒரு தெளிவான முடிவை நோர்வே அரசு எடுக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

படைக்கான...

ஊக்கப்படுத்துவதில்லை. இதற்குக் காரணம், வேலைப்பழுவிற்கு ஏற்ற ஊதியம் இராணுவத்தில் இல்லை என, அவர்கள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வடக்கு...

டங்களை நடத்தியும் எந்தவித பலனும் கிட்டவில்லை.

எனவே, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி ஐ.நா சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவதற்கு முன்னர், வலி. வடக்கு மக்களை மீள அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்தக் கோரி, ஒரு இலட்சம் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை ஐ.நா செயலாளருக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளோம்.

இந்தக் கையெழுத்துவேட்டை- நாளை தொடக்கம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்தக் கலந்துரையாடலில்,

வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டுமென, நீதிமன்றில் வழக்கத் தாக்கல் செய்வது தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிப்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வலி. வடக்கு மக்களின் பிரதிநிதிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சந்தித்தல், எதிர்வரும் 18 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சருடன் -அரச அதிபரும், பிரதேச செயலர்களும் சந்திப்பொன்றை நடத்த இருப்பதால், அந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளும். பாதுகாப்பு அமைச்சருக்கு அரச அதிபர் ஊடாக - வலிவடக்கு மக்களின் மீளக்குடியமர்வு சம்பந்தமான மகஜரை அனுப்புவது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கதிர்காமர் கூறிய...

படைத் தளபதி சென்றார். அப்போது ஜனாதிபதி - அந்த அறிக்கையை தனது ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரிடம் வழங்கும்படி கூறினார். அதற்கமைய, அந்த அறிக்கை லக்ஷ்மன் கதிர்காமரிடம் வழங்கப்பட்டது.

ஆனால், அவர் இரகசியத்தன்மையைப் பேணாது, அந்த அறிக்கையில் உள்ளவற்றை ஊடகங்களிற்கு தெரிவித்தமையானது - பல்வேறு சிக்கல்களைத் தற்போது தோற்றுவித்துள்ளது.

இதனால், கடற்படையினர் இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்குகின்றனர் எனவும் கடற்படைத் தளபதி மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.